Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 103

புதன்கிழமை 09 மார்ச் 2022

மாசி 25 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

கொரோனா
நேற்று 632
மொத்தம் 6,53,661

உயிரிழப்பு
நேற்று 11
மொத்தம் 16,350

## பஸ் சாரதி மீது கத்திக் குத்து!

யாழ்ப்பாணம், மார்ச் 9
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பயணி 15

## இன்றும் மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 9
இன்று நாடளாவிய ரீதியில் மூன்றரை மணித்தியாலங்கள் சுழற்சி 14

## கோத்தாபயவின் மாமியார் மரணம்

கொழும்பு, மார்ச் 9
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 15

## கொய்யாப்பழம் பறிக்க முயன்ற சிறுமி கிணற்றில் வீழ்ந்து சாவு!



### மாங்குளத்தில் சோகம்

முல்லைத்தீவு, மார்ச் 9
மரத்தில் ஏறிக் கொய்யாப்பழம் பறிக்க முயன்ற 14 வயதுச் சிறுமி தவறிக் 15

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்:

## 14,988 முறைப்பாடுகள்; விசாரிக்க 25 குழுக்கள்

### ஐ.நாவை சமாளிக்கும் முயற்சி?

கொழும்பு, மார்ச் 9
காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை தொடர்பில் துரித விசாரணை 15

# தமிழ்க் கட்சிகளை இணைத்து அரசியல் தீர்வுக்கு நகருங்கள்

## இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம்

**ஜெனிவா, மார்ச் 9**
**இலங்கையில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடனும், சிவில் சமூக அமைப்புக்களுடனும் அரசாங்கம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.** 15

## இயந்திரத்தில் கற்கள் அரிந்த இளைஞன் மின் தாக்கி சாவு!

### கொழும்புத்துறையில் துயரம்

யாழ்ப்பாணம், மார்ச் 9
சிமெந்துக் கல் அரியும் இயந்திரத்தை இயக்கிய இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், 15

## கோத்தாபய தலைமையில் விசேட பொருளாதார சபை

கொழும்பு, மார்ச் 9
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் விசேட பொருளாதார சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப் பெரும தெரி 15



"எத்தினை சபையை அமைச்சாலும் செத்துப்போன பொருளாதாரத்துக்கு உயிர் குடுக்க முடியாது கண்டியளோ..."

## தமிழக மீனவர்கள் 11 பேர் விடுதலை!

### ஒத்திவைத்த சிறைத்தண்டனையும் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் 15

## போதையில் தந்தை தகராறு: பொலிஸாரிடம் சிறுமி தஞ்சம்!

யாழ்ப்பாணம், மார்ச் 9
மது போதையில் வீட்டில் தந்தை தினமும் தகராறில் ஈடுபடுகின்றார் என்றும் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்று தெரிவித்து 12 வயதுச் சிறுமி ஒருவர் அச்சுவேலிப் 15

மகளிர் தினத்தில் சம்பவம்



## வயோதிபத் தம்பதியரைத் தாக்கி 32 பவுண் நகைகள் கொள்ளை!

முல்லைத்தீவு, மார்ச் 9
ஒட்டுசுட்டானில் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள், அங்கிருந்த வயோதிபத் தம்பதியரைத் தாக்கி, அச்சுறுத்தி 32 பவுண் நகைகளை 15

பயங்கரவாதத் தடைச்சட்ட வரைவு

## திருத்தம் செய்யாதுவிட்டால் 2/3 பெரும்பான்மை தேவை!


### சட்ட வியாக்கியானத்தை அனுப்பியது உயர் நீதிமன்று

கொழும்பு, மார்ச் 9
திருத்தங்கள் சகிதமே புதிய பயங்கரவாதத் தடைச்சட்ட வரைவு நிறைவேற்றப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் சட்ட வியாக்கியானம் வழங்கியுள்ளது. நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை 15




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகத்துக்குள் குடியமர்ந்த புத்தர் சிலை!



**வவுனியா, மார்ச் 9**

**தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் அமைந்துள்ள, வவுனியா தெற்கு (சிங்கள பிரதேச செயலக) வளாகத்திலும் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.**

பிரதேச செயலர் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து புத்தர் சிலையை நேற்றுமுன்தினம் பிரதிஷ்டை செய்தனர். குறித்த பகுதியில் தமிழ் மக்களே செறிவாக வாழ்ந்து வருகின்றனர். பிரதேச செயலகத்திலும் உதவிப் பிரதேச செயலர் உட்பட அதிகளவிலான உத்தியோகத்தர்கள் தமிழ், முஸ்லிம்களாக உள்ளனர். இந்த நிலையில் வடக்கில் இடம்பெற்றுவரும் அரசின் பௌத்த மயமாக்கல் திட்டங்களுக்கு, பிரதேச செயலகங்களும் உடந்தையாகச் செயற்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-4-18)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

கட்டுவன்மேற்குப் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 540 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம-14-23)

## கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டு சந்தேகநபர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 9

ஊரெழுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் கைதான மூவர் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரிடமிருந்து ஒரு போத்தல் கசிப்பு மற்றும் மூன்று போத்தல் கோடா கைப்பற்றப்பட்டதோடு கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இதனையடுத்து குறித்த சந்தேக நபர்கள் கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ம-14-23)



## வீடு புகுந்து தாக்குதல் வாகனத்துக்குச் சேதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 9

வீட்டுக்குள் அத்துமீறி உள்நுழைந்த நால்வரடங்கிய குழு, கூரிய ஆயுதங்களால் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனம் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவம் மானிப்பாய் நவாலி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. தாக்குதலில் வாகனத்தின் கண்ணாடிகள் முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-4-125)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்தியடியில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த இடத்தில் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 60 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ம-14-125)

## பேருந்தில் பணத்தைப் பறித்த சந்தேகநபர் மடக்கிப்பிடிப்பு!

மன்னார், மார்ச் 9

அரச பேருந்தில் பயணித்த முதியவரிடம், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்ற நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர். மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மெனிக்பாம் பகுதியில் வசிக்கும் முதியவர், எழுத்தூர் பகுதியில் வசிக்கும் மகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு பேருந்தில் வவுனியா செல்வதற்காக பயணித்துள்ளார். திருகோணமலையைச் சேர்ந்த சந்தேகநபர் முதியவரின் அருகிலிருந்து பயணித்துள்ளார்.

நானாட்டான் பேருந்து தரிப்பிடத்தில், பயணிகளை ஏற்றுவதற்காக பேருந்து நின்றபோது அருகிலிருந்த சந்தேகநபர், முதியவர் வைத்திருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளார். முதியவரின் கூச்சலை அடுத்து அங்கிருந்தவர்கள் சந்தேகநபரை மடக்கிப் பிடித்தனர். சந்தேகநபர் முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-4-213)

## ஊரெழு மேற்குப் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு மேற்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 43 வயதான நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது அவரிடம் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ம-14-125)



## மோட்டார் சைக்கிள்- பஸ் விபத்தில் இளைஞர் காயம்

கிளிநொச்சி, மார்ச் 9

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பஸ் விபத்தில் இளைஞர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ், தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டபோது பஸ்ஸுக்குப் பின்னால் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து பஸ்ஸுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டது. விபத்தில் காயமடைந்த இளைஞர் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-9-113)

## 17 பிரதேசங்களில் டெங்குத் தொற்று



கொழும்பு, மார்ச் 9

நாட்டில் டெங்குத் தொற்றுத் தீவிரமடைந்துள்ள நிலையில், தெல்லிப்பழை, நல்லூர், உடுவில் மற்றும் முந்தல் உட்பட 17 பிரதேசங்கள் தொற்றுப் பிரதேசங்களாக புதிதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனவரியிலிருந்து நாடு முழுவதும் டெங்குத் தொற்று தீவிரமடைந்துள்ளது. கடந்த மாதத்தில் 2 ஆயிரத்து 962 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது.

பொரளஸ்கமுவை, அத்தனகலை, திவுலப்பிட்டிய, மீரிகமை, அம்பலாங்கொடை, தெல்லிப்பழை, நல்லூர், உடுவில் மற்றும் முந்தல் உள்ளிட்ட 17 பிரதேசங்களில் டெங்கு புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் தொற்று தீவிரமாகுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன என்று எச்சரிக்கப்படுகின்றது.

எனவே மக்கள் டெங்குத் தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-4-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊர்ப் பெயர்களில் உள்ள

# தமிழ்மொழிப் பிழைகள் திருத்தப்படல் வேண்டும்

## தவிசாளர் சி.சிறிரஞ்சன் கோரிக்கை

**கிளிநொச்சி, மார்ச் 9**

**பூநகரிப் பகுதிகளிலுள்ள அரச திணைக்களங்களின் பெயர்ப்பலகைகளில் காணப்படும் ஊர்களின் பெயர்களில் உள்ள தமிழ்மொழிப் பிழைகளைத் திருத்துவதற்கு அரச கரும மொழிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இவ்வாறு பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் உரிய திணைக்களங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். பூநகரி - புனரின், மண்டைக்கல்லாறு- மாந்தைக்கல்லாறு, வீரபாண்டியன் முனை- வீரவண்டியன்முனை, கொடுதாவில் - கொவிக்கொடுத்தாவில், கரியாலைநாகபடுவான்- கரிகளைநாகபடுவான் என எழுத்துப்பிழைகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் பாரதூரமான தவறுகள் ஏற்படுவதற்கு இது வழிசமைக்கும். எனவே ஊர்ப் பெயர்களை சரியான தமிழில் பெயர்ப்பலகைகளில் வெளிப்படுத்துவதற்கு அரசகருமமொழிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ம-4-13)

## வாள்வெட்டுக் குழுவால் ஓட்டோ மீது தாக்குதல்



யாழ்ப்பாணம், மார்ச் 9

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருபாலைச் சந்திக்கு மோட்டார் சைக்கிளில் வந்த மூவரடங்கிய குழு, சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஓட்டோவை மீட்டதோடு மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14-125)



## யாழ். இந்தியத் தூதுவருடன் கடற்றொழிலாளர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா, உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் மற்றும் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கந்தசாமி ராஜசந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ம-14,125)

## கடதாசிகளுக்கும் நாட்டில் தட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 9

டொலர் தட்டுப்பாட்டால் நகல் எடுக்கப் பயன்படுத்தப்படும் கடதாசிகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் நகல் எடுக்கப் பயன்படுத்தப்படும் கடதாசிகளின் தேவை சுமார் 150 சதவீதம் உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடதாசிகள் கிடைக்காமையால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

500 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட கடதாசித் தொகுதி தற்போது ஆயிரத்து 200 முதல் ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ச-இ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் 5 மாடிக் குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குருநகர் பகுதியில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே உடைமையில் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது அவரிடம் ஒரு கிராம் 750 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரால் சந்தேகநபருக்கு [illegible] நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ம-14,125)

## தூக்கில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 9

தூக்கில் தொங்கிய நிலையில், இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஜெயபுரம் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச்சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய இளம் குடும்பத்தலைவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-4-113)



முந்தி சாத்திரத்திலதான் ஏழரையோ எட்டரையோ என்டெல்லாம் பாக்கிறவை. சனி, செவ்வாய் எண்டு கிரகங்கள் நிக்கிற நிலைய வைச்சு எங்களுக்கு நல்ல காலமோ கெட்டகாலமோ எண்டு சாத்திரிமார் சொல்லுவினம். ஆனால், இப்ப "நீங்கள் ஏழரையோ? மூண்டோ?" எண்டுதான் எல்லாரும் ஆளையாள் கேக்கினம்.

ஏனென்டால் இங்கிலீஸில உள்ள ஊரிப்பட்ட எழுத்துகளவைச்சு இலங்கையை ஒவ்வொரு வலயங்களா பிரிச்சுத்தான் கரண்ட் குடுபடுகுது. சில வலயங்களுக்கு ஏழு மணித்தியாலமும் வேற சில வலயங்களுக்கு மூண்டு மணித்தியாலமும் இப்பிடி குடுபடுற கரண்ட் கட் பண்ணுகினம். ஒவ்வொருநாளும் இந்த வலயங்களின்ர கரண்ட் வெட்டிற நேரம் மாறிக்கொண்டே இருக்கு. அதால "இண்டைக்கு எத்தின மணித்தியாலம் கரண்ட்டைக் கட்?" என்டதைக் கண்டுபிடிக்கிறதே சனத்துக்குப் பெரிய பாடா இருக்குது.

உந்த இங்கிலீஸ் எழுத்துகளில வலயங்களப் பிரிக்காமல் ஒவ்வொரு மாவட்டத்துக்கோ அல்லது மாகாணத்துக்கோ இத்தனை மணித்தியாலம் கரண்ட் கட் ஆகும் எண்டு அறிவிச்சால் அதுக்கேத்தபடி சனங்கள் முன்னாயத்தமாக இருக்கலாமல்லோ. அதவிட்டிட்டு எழுத்துகளச் சொல்லி எந்த வலயத்துக்க இருக்கிறம் எண்டே தெரியாமல் சனத்தை சுத்தல்ல விடுறது சரியோ? இப்பிடி கரண்ட் வாற நேரகாலம் தெரியாததால சனங்கள் மட்டுமில்லாமல் கன தொழில்களும் பாதிக்கப்படுது. அதிலையும் குறிப்பா உந்த சலூன்காரர் படுகிறபாடு கொஞ்சநஞ்சமில்லை. இப்ப கத்திரிக்கோலை விடவும் கட்டர் பாவிக்கிறதுதான் கூட. கன சலூன்களில தலைமயிர் அரைவாசி கட்டரால வெட்டிக் கொண்டிருக்கேக்கயே கரண்டும் கட்டாப்போகுது. மிச்சத்த கத்திரிக்கோலால வெட்டினால் அது கட்டரால வெட்டிறது மாதிரி வராது. கட்டர் போட்டு ஷேவ் எடுக்கேக்கையும் கரண்ட் நிண்டால் இதே பிரகண்டம்தான். இதால தேவையில்லாமல் வாடிக்கையாளரோட சில சலூன்காரர் சண்டை பிடிக்கிற அளவுக்கு நிலைமை போயிருக்கு. அதால இப்ப மற்றவை கரண்ட் கட் எப்பவெண்டு தெரிஞ்சு வைச்சிருக்கிறினமோ இல்லையோ சலூன் வைச்சிருக்கிறவையள் மட்டும் இத வடிவாப் பாக்கினம். அதுக்கேத்தபடி எப்பவெல்லாம் கரண்ட் கட் ஆகுதோ அப்பவெல்லாம் சலூனைப் பூட்டிப்போட்டு திரும்ப கரண்ட் வந்த பிறகுதான் திறக்கினம். இப்ப பிரச்சினை சாதாரண சனத்துக்கு. ஏனென்டால் எப்ப சலூன் திறக்கும் எப்ப மூடும் எண்டத கரண்ட் வந்துபோற நேரத்தை வைச்சுத்தான் கண்டுபிடிக்க வேண்டிக் கிடக்குது.

ஒரு கரண்ட் எத்தினை ஆட்டம் காட்டுது பாருங்கோ...!



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்காலச் சிந்தனை

### கடந்துவந்த பாதையில் நான் எங்கே இருக்கிறேன்?

தவக்காலம் தொடங்கிவிட்டால் நாற்பது நாள்கள் உபவாசம் இருப்பதும், திருச்சிலுவைப் பாதை சுற்றுவதும், திருத்தல யாத்திரைகளை மேற்கொள்வதும், மது அருந்தும் பழக்கத்தை உடையவர்கள் அதை அருந்தாமல் விட்டு விலகுவதும் என சில வரையறைகளை எமக்குள் வகுத்து வைத்திருக்கின்றோம்.

இவை அனைத்தும் பாரம்பரியந்தொட்டு எமக்குப் பழக்கப்பட்டதாகிவிட்டன. ஆனால் இவையெல்லாம் உயிர்ப்பு ஞாயிறுடன் முடிந்துவிடும். பின்னர் நாம் பழையபடி எப்படியும் வாழலாம் என்ற எண்ணத்துடன் வாழ்கின்றோம். இறை இரக்கத்தின் அன்பைச் சுவைக்கின்றகாலம் இந்தத் தவக்காலம். இந்தக் காலத்தில் நாம் உண்மையாகவே செய்ய வேண்டியது என்ன? எங்களுடைய கடந்தகால வாழ்க்கையை ஒருமுறை அலசிப்பார்க்க வேண்டும். கிறிஸ்தவன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நான் அதற்கேற்றபடி வாழ்கின்றேனா? என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான், எனது, எனக்கு மட்டும் என்ற குறுகிய வட்டத்துக்குள் வரட்டுக் கௌரவம் பிடித்தவர்களாய் வாழும் எங்களுக்கு எமக்கு அடுத்திருப்பவர்களின் துன்பங்கள் தெரிவதில்லை. எமது சிந்தனை, சொல் செயல்களினால் எத்தனை சகோதர , சகோதரிகளின் நற்பெயரைக் கெடுத்து அவர்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கி நடைபிணங்களாக்கி இருக்கின்றோம். எமது குடும்பத்தைவிட அயல்வீட்டார் முன்னேறக்கூடாது. என் விட்டுப் பிரச்சினைகளைப் பார்ப்பதிலும்விட அடுத்தவர் வீட்டுக் காரியங்களிலே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றோம்.

கண்ணாடி வீட்டில் வாழுவோர் கவனமாய் இருக்கவேண்டும் என்பதை மறந்து வருகின்றோம். துன்பத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அவர்களுடைய முகத்தையே உருக்குலைக்கின்றோம். இவற்றுக்கெல்லாம் காரணம் எம்மில் குடிகொண்டிருக்கும் ஊனியல்பின் செயற்பாடுகள் அல்லவா? ஏனெனில் ஊனியல்பின் செயற்பாடுகள் மேலோங்கி நிற்கும்போது ஆவியானவரின் செயற்பாடுகளுக்கு இடமேது? 'உன்னை நீ அன்பு செய்வது போல உனக்கு அடுத்திருப்பவனையும் அன்பு செய்' என்ற கட்டளையை எம் வாழ்வில் கடைப்பிடிக்கிறோமா? கண்ணால் காணும் மனிதனை அன்பு செய்யாமல் புலன்களுக்கு அப்பால் இருக்கும் கடவுளை எப்படி அன்பு செய்ய முடியும்? சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு எவற்றையெல்லாம் நாம் செய்யவில்லையோ அவற்றையெல்லாம் இயேசுவுக்கும் செய்யவில்லை என்பதை உணருவோம்.

பசித்திருப்பவனுக்கு உணவு கொடுப்பதும், ஆடையின்றி இருப்பவனுக்கு ஆடைகொடுப்பதும், சிறையில் வாடுவோரை சந்தித்து ஆறுதல் அளிப்பதும் என இப்படியாக இரக்கச் செயல்கள் பல இருக்கின்றன. இந்த இரக்கச் செயல்களைச் செய்வதில் ஈடுபாடு காட்டுவோம். ஏழைகள், அநாதைகள், ஊனமுற்றோர், நோயினால் துன்புறுவோர், சிறையில் வாடுவோர் இவர்கள் மட்டில் அன்பும் இரக்கமும் கரிசனையும் உள்ளவர்களாய் அவர்களின் துன்பங்களைத் துடைக்க முன்வருவோம்.

இதுவே உண்மையான உபவாசத்தின் பலாபலனாகும். ஒவ்வொரு மனிதனும் என் நண்பன். ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன் என்ற உணர்வுடன் எமக்கு அடுத்திருப்பவரிலே இயேசுவைக்காண இன்றே முற்படுவோம்.

மாரியதாஸ் ரதி,
கொழும்புத்துறை

# மேய்ச்சல் தரவையில்லை பண்ணையாளர்கள் சிரமம்

**முல்லைத்தீவு, மார்ச் 9**

**பரந்த வனப்பரப்புக்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மேய்ச்சல் தரவை இல்லாததால், கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், வெலிஓயா பிரதேசங்களில் பல நூற்றுக்கணக்கான பண்ணையாளர்கள் இவ்வாறு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 801 கால்நடைகள் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இங்கிருந்து நாள்தோறும் அதிகளவான பால் வெளிமாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆனால் கால்நடைகளுக்கு ஏற்ற மேய்ச்சல் தரவைகள் இல்லாத நிலையே மாவட்டத்தில் காணப்படுகின்றது.

2 ஆயிரத்து 402 ஏக்கர் காணிகள் மேய்ச்சல் தரவைக்காக அடையாளம் காணப்பட்டு, முன்மொழியப்பட்டபோதும், வனவளத்திணைக்களம் காணிகளை விடுவிக்கவில்லை என்று பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-4-19)



பாடசாலை மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் வகையில் சிறகுகள் அமையம் ஊடாக சேகரிக்கப்பட்ட புத்தகங்கள் மன்னார் ஜேசெப் வாஸ் நகர நூலகத்துக்கு அண்மையில் வழங்கப்பட்டன. (ம-4-இ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்



யாழ்ப்பாணம், மார்ச் 8

சந்நிதியான் ஆச்சிரமத்தால், துணுக்காய், தேறாங்கண்டல் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப்பொருள்கள் மற்றும் நிதியுதவி வழங்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட 75 குடும்பங்களுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலர் உணவுப்பொருள்களும் மற்றும் 75 ஆயிரம் ரூபா நிதியும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கினார். (ம-4,113)

## பொலிஸ் அலுவலருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் சுற்றுக்காவல் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த பொலிஸ் அலுவலர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-14,125)



பூநகரி பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், கரியாலைநாகபடுவான் ஆகிய கிராமங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற 30 குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு நாட்டுக்கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. (ய-13)



## யாழ். இந்துவில் சாரணர்களால் பழமரக்கன்றுகள் நடப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து, ஜனாதிபதி சாரணர் விருது பெற்றுக்கொண்ட மாணவர்கள் 'நினைவுகள் இனித்திடவேண்டும்' என்ற தொனிப்பொருளில் மரநடுகையில் ஈடுபட்டனர்.

சாரணர் நிறுவுநர் பேடன் பவல் பிரபுவின் பிறந்த தினத்தை நினைவுகூர்ந்தும், ஜனாதிபதி விருது பெற்றுக்கொண்ட ஞாபகார்த்தமாகவும் கல்லூரி முதல்வர் ஆர்.செந்தில்மாறனின் வழிகாட்டலில் குறித்த காலப்பகுதி குழுச் சாரணியப் [illegible] சாரணப் [illegible] ஆகியோரது பங்கேற்புடன் இந்த மரக்கன்றுகள் நடப்பட்டன. (ம)

## நூல் வெளியீடும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

க.திருவம்பலம் எழுதிய 'திருவரங்கனின் மனக்கோலங்கள்' என்ற நூலின் வெளியீடு, கடந்த மாதம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது நூலாசிரியரின் மனிதநேயப்பண்புகளைப் பாராட்டி சென்.றோக் சனசமூக நிலையத்தால் 'மனித நேயக் காவலன்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கலாபூசணம் செ.யோசப்பாலா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலர் ஜோய் றொபின்சன் சோபிகா, யாழ்ப்பாணம் மெதடிஸ்த திருஅவை ஞானரூபன் அடிகளார், யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்ற உதவி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பாந்தோட்டையில் மஞ்சள் கொள்முதல்

கொழும்பு, மார்ச் 9

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மஞ்சளைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின்கீழுள்ள ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் மஞ்சள் 165 ரூபா என்ற அரசின் உத்தரவாத விலையில் கொள்வனவு செய்யப்பட்டது. அதற்கான பணத்தை விவசாயிகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கினார். (ம-4-இ)

# பதவியைப் பிடுங்குவது வழமையானதொன்றே

## கம்மன்பில ஆதங்கம்



கொழும்பு, மார்ச் 9

இந்த ஆட்சியில் அமைச்சுப் பதவியை ஒருவருக்கு வழங்குவதும் அதைப் பிடுங்கி எடுப்பதும் வழமையானது. இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் குணம் என்று புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிக் கதிரையில் ஏற்றி அழகு பார்க்க எண்ணினோம். பல சவால்களுக்கு மத்தியில் இறுதியில் எமது ஆசையை நிறைவேற்றினோம். ஆனால், கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்குகின்றோம் என்ற பெயரில் சிலர் அவரை அவமரியாதைக்கு உட்படுத்தியது மட்டுமன்றி நாட்டையும் சீரழித்தனர்.

இது தொடர்பில் நாம் கேள்விகளை எழுப்பியபோதே, எம்மீது அம்பு பாய்ந்தது. நானும் விமல் வீரவன்சவும் அமைச்சுப் பதவிகளை இழக்க வேண்டி வந்தது. இந்தச் சதிவேலைகளுக்குத் தலைமை தாங்கியவர் வேறு யாருமல்லர்.


அமெரிக்கப் பிரஜையான அவர், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவைத் தோல்வியடையச் செய்துவிட்டு, நாட்டைவிட்டுத் தப்பியோடியதை தற்போதைய ஜனாதிபதி மறக்கமாட்டார் என்று நம்புகின்றோம். குடும்பத்துக்குள் இருந்து குழி பறிக்கும் செயல்களில் ஈடுபடும் அவரைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அழைத்தமை படு முட்டாள் தனமானது -என்றார். (ம-4-22)

### ஐக்கிய மக்கள் சக்தியினரால்

# அரசுக்கு எதிராக தீப்பந்தப் போர்!

கொழும்பு, மார்ச் 9

**பண்டாரவளை மாநகரில் ஐக்கிய மக்கள் சக்தியினரால் தீப்பந்தப் போராட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.**



மின் துண்டிப்பு, எரிவாயுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடுகள், அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடுகள் ஆகிய பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று இந்தப் போராட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது. அரசின் வினைத்திறனற்ற நடவடிக்கைகளைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதன் தொடர்ச்சியாகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)



# ராஜபக்சக்களாலேயே மக்களுக்கு தீர்வுகிட்டும்

## அரச தரப்பினர் தெரிவிப்பு

தற்போது ஆட்சியிலுள்ள ராஜபக்சக்களே மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவர். அவர்களாலேயே மக்களுக்குத் தீர்வு கிட்டும் என்று அரச தரப்பு அமைச்சர்கள் தெரிவித்தனர். அம்பாந்தோட்டையில் 626 குடும்பங்களுக்கு புதிய வீடமைப்பு உதவிக் காசோலைகள் வழங்கும் நிகழ்வில், அவர்கள் இதனைத் தெரிவித்தனர். நிகழ்வில் நீர்ப்பாசனத்துறை அமைச்சர சமல் ராஜபக்ச தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக்ச அன்று போரை முற்றாக நிறுத்தி நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்தி உயிர்களைக் காப்பாற்றினோர். கடந்த அரசு நன்மை செய்திருந்தால் அதனை எங்களில் எவரேனும் தடுக்க மாட்டோம். அதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம். கடந்த அரசு என்ன செய்தது?. அவர்களின் கவனக்குறைவான செயற்பாடுகளால் இன்று பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது -என்றார்.

கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவிக்கையில், மக்களின் உண்மையான பிரச்சினைக்கு பதில் சொல்லக்கூடிய அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பாராயின், அது மஹிந்த ராஜபக்ச ஒருவரே. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கீழ் மக்களுக்கு நியாயமானதை வழங்குவோர் இந்த ராஜபக்சக்களே தவிர வேறு யாரும் இல்லை. மக்களின் கோரிக்கைகளைச் சரியாக நிறைவேற்றுபவர்கள் இந்த ராஜபக்சக்களே - என்றார். (ம-4-இ)

# அரிசி இறக்குமதியில் பெரும் நிதி மோசடி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 9

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 30 மில்லியன் டொலர் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு கொரோனாத் தொற்றுக்காலத்தைவிட மோசமான நிலையில் உள்ளது. மியான்மாரிலிருந்து 3 லட்சம் மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நிலையில், முதற்கட்டமாக ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்கப்பட்டுள்ளது.

மியான்மர் வேறு நாடுகளுக்கு ஒரு மெற்றின் தொன் அரிசியை 350 டொலருக்கு விற்பனை செய்துவரும் நிலையில், இலங்கைக்கு 450 டொலருக்கு ஏற்றுமதி செய்கின்றது. நாட்டு மக்கள் வீதி வீதியாகப் போராடி வரும் நிலையில், பெரும் தொகை நிதியை அரிசி இறக்குமதிக்குப் பயன்படுத்தியுள்ளனர். அரிசி இறக்குமதிக்காக மேலதிகமாக செலவழிக்கப்படும் நிதியில் நாட்டு மக்களுக்கு 3 மாதங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்கலாம். பஸில் ராஜபக்சவை நிதியமைச்சராக அமர்த்தியதன் பின்னர், எல்லாவற்றையும் சாதித்து விடலாம் என சிலர் தப்புக்கணக்குப் போட்டனர். அதன் பின்னரே பொருளாதார ரீதியில் நாடு அதல பாதாளத்துக்குச் சென்றது -என்றார். (ம-4-20)

# 24 மணித்தியாலங்களில் விபத்தால் 14பேர் சாவு!

கொழும்பு, மார்ச் 9

நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நேற்றுமுன்தினம் காலை வரையான 24 மணித்தியாலங்களில் பதிவாகிய 13 வாகன விபத்துக்களில் 14பேர் உயிரிழந்துள்ளனர்.

கிரிபாவ, இங்கிரிய, பூவரசங்குளம், அநுராதபுரம், பொரளை, பதியத்தலாவ மற்றும் ஹபரணை, ஆனமடுவ, நவகுருதுவத்தை, இரத்தினபுரி, அங்குனகொலபெலஸ்ஸ, கிளி[illegible] வெலிக்கடை ஆகிய இடங்களில் விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்கள் 12 வயதுக்கும் 78 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும், பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் செலுத்தியவா[illegible] தெரிவித்தனர். (ம-4-இ)



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், அக்கரைப்பற்று- கல்முனை வீதியில் தீப்பந்தம் மற்றும் சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறு நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jaffna INTERNATIONAL CINEMA FESTIVAL

கிருபாலினி பாக்கியநாதன்

# ஏழாவது ஆண்டாக

# யாழ். சர்வதேச திரைப்பட விழா!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுயாதீன சினிமாவைக் கொண்டாடுதல் எனும் நோக்கத்தோடு, 2014ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் கொண்டாடப்படும் யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவானது அதன் ஏழாவது ஆண்டைத் தற்பொழுது எட்டியுள்ளது. இவ்விழா இன்று முதல் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பெருந்தொற்றுப்பரவலின் காரணமாக 2021ஆம் ஆண்டில் கொண்டாடப்படாது பிற்போடப்பட்ட அவ்வாண்டுக்கான திரைப்படவிழாவே இவ்வாண்டில் கட்டம் கட்டமாகப் பிரித்துக் கொண்டாடப்படுகின்றது. 2021ஆம் ஆண்டுக்கான முதலாம் கட்டத் திரையிடல்கள் இவ்வருடம் தை மாத இறுதியில் கண்டி வீதியிலுள்ள ஜேர்மன் கோத்தே நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் பண்பாடுகளின் சந்திப்பு வெளியாகிய காலத்தில் ஏலவே இடம்பெற்றிருந்தன.

அதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டத் திரையிடல்களும், நிகழ்வுகளுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது இடம்பெறவுள்ளன. இறுதியாக, விழாவின் இறுதிக் காட்சியும் விருது வழங்கல் நிகழ்வும் 14ஆம் திகதி மாலை 5மணியளவில் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்திலுள்ள றீகல் சினிமாவில் இடம்பெறும்.

### வேற்றுநாடுகளைச் சேர்ந்த 14 குறும்படங்கள் காட்சிக்கு

முந்தைய காலங்களில், யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் திரைப்படக் காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பொதுசன நூலக கேட்போர் கூடம், சமகாலக் கலை, கட்டடக்கலை வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம், பிரிட்டிஷ் கவுண்சில் மற்றும் அமெரிக்கத் தகவல் கூடம் ஆகியவற்றிலும் இடம்பெறுவது வழக்கம். ஆனால் பெருந்தொற்றின் கட்டுப்பாடுகள் காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட இடங்களிலேயே காட்சிகள் இடம்பெறவுள்ளன. இத்திரைப்பட விழாவானது அஜென்டா 14 எனும் இலாப நோக்கற்ற திரைப்படத்துறை சார்ந்த அமைப்பின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பல வெளிநாட்டுத் தூதரகங்கள், கலாசார பண்பாட்டு நிறுவனங்கள், சிலோன் தியேட்டர்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை மற்றும் அதன் திரைப்படச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையோடு இடம்பெறுகிறது.

ஒவ்வொருவருடமும் இத்திரைப்பட விழாவில் வெவ்வேறு நாடுகளின் பல விருதுகளை வென்ற வெவ்வேறு மொழித் திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்கள், விருதுக்காகப் போட்டியிடும் சர்வதேச, இலங்கைக் குறுந்திரைப்படங்கள், அறிமுகத் திரைப்படங்கள் என்பன ஆங்கில உபதலைப்புக்களுடன் திரையிடப்படுகின்றமை வழக்கமாகும். அந்த வரிசையில் இந்தவருடமும் 18 காட்சித் திரைப்படங்கள், 7 அறிமுகத் திரைப்படங்கள் மற்றும் சர்வதேச, தேசிய சிறந்த குறுந்திரைப்பட விருதுக்காகப் போட்டியிடும் ஆர்மேனியா, கஜகஸ்தான், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், போர்த்துக்கல், பங்களாதேஷ், இந்தியா, ரஷ்யா, கம்போடியா ஆகிய நாடுகளைச் சார்ந்த 14 சர்வதேசக் குறுந்திரைப்படங்கள், இலங்கையைச் சார்ந்த 14 குறுந்திரைப்படங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்படவுள்ளன. இந்தத் திரைப்படக்காட்சிகள் தினமும் மு.ப. 10 மணி, பி.ப. 1.15 மணி, மாலை 4.45 மணி என மூன்று காட்சிகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன. இந்தத் திரைப்படக் காட்சிகள் அனைத்தும் இலவசமாகப் பார்வையிடக்கூடியவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### கலைஞர்கள் சங்கமிக்கும் கேந்திரமாக திரைப்படவிழா

இங்கு காட்சிப்படுத்தப்படும் காட்சிப்படங்கள் எவ்வாறு பார்வையாளனுக்குத் தேசம், மொழி எனும் எல்லைகளைக்கடந்து, வெவ்வேறு தேசங்களின் பண்பாடுகளைப் புரிந்துகொள்ளவும், ரசிக்கவும் வைக்கின்றனவோ அவ்வாறு பல திரைப்படக் கலைஞர்களையும் ஒன்றிணைக்கும் வெளியாக இத்திரைப்படவிழா அமைகின்றது.

இளையவர்களின் முயற்சிகளுக்கு வாய்ப்பளித்தல், பார்வையாளர்களுக்கு எம்மவர்களின் முயற்சிகளைப் பரிச்சயப்படுத்துதல், அவற்றுக்கான அங்கீகாரம் வழங்குதல் எனும் நோக்கங்களின் அடிப்படையில் 'தேசிய சிறந்த குறுந்திரைப்பட விருது' எனும் ஒரு விருது ஆண்டுதோறும் இங்கு வழங்கப்படுகிறது. மேலும், பார்வையாளர்களது விருப்புத் தெரிவினடிப்படையில் 'பார்வையாளர் விருது' எனும் இன்னொரு விருதும் வழங்கப்படுவதோடு சர்வதேச சிறந்த குறுந்திரைப்பட விருது, சிறந்த அறிமுகத் திரைப்பட விருது ஆகிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.




### கலந்துரையாடல்களும் தேடல்களும்

திரைப்படவிழாவின் ஓர் அங்கமாக மிகத்தேர்ச்சி பெற்ற திரைப்படத் துறைசார் விற்பன்னர்களின் வகுப்புகள் ஒவ்வொரு வருடமும் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.

இவ்வகுப்புக்கள் திரைப்படத்துறை சார்ந்து இயங்குபவர்களுக்கும் அத்துறையில் தொழிற்பட ஆர்வமுடையோருக்கும் தொழில்நுட்ப, தயாரிப்பு சார்ந்த அறிவை வழங்குவதையும் திரைப்படத்துறைசார் திறனை வளப்படுத்தலையும் இலக்காகக் கொண்டவையாகும்.

வர்ணச் செம்மைப்படுத்துநரான டினிந்து ஜாகொட என்பவரின் நவீன சினிமா நிலவுருவில் 'வர்ணத் தொனிநிலைப்படுத்தல்' எனும் தலைப்பில் இவ்வருடத்துக்கான வகுப்பு 14ஆம் திகதி கலம் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இவ்வகுப்புக்களில் பங்குபற்றுவதற்கான அனுமதிக்கட்டணங்கள் எதுவுமில்லையென்பதுடன், இதில் ஆர்வமுடைய எவரும் பங்குபற்றலாம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநாளில் பி.ப. 1.15மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'மௌனத்துடன் போராடுதல்: உரையாடலுக்கான திரைப்படம்' எனும் தலைப்பில் திரைப்பட விழாவின் பணிப்பாளராகிய அனோமா ராஜகருணாவால் தொகுத்து வழங்கப்படும் குழுக் கலந்துரையாடலும் அதனைத் தொடர்ந்து 'சினிமாப் பைத்தியம்: யாழ்ப்பாணத்தில் சினிமாத் தியேட்டர்கள்' மற்றும் 'பார்வைத்துவம் 1930 -2000' எனும் தலைப்பிலான உரையும் இடம்பெறவுள்ளன.

இவ்வுரையுடன் தொடர்புறுவதாகக் 'கடந்த மூன்று வருடங்களாகத் திரைப்பட விழாவின் ஓர் அங்கமாக என்றும் பசுமையான வெள்ளித்திரை' எனும் தலைப்பில் போருக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய சினிமாத் தியேட்டர்களின் ஞாபகங்களை மீட்பதான ஞாபக நடையும் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### இம்முறையும் விருதுகள்

யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்படவிழாவில் மிக முக்கியமான ஒரு விடயம் யாதெனில், திரைத்துறையில் மிகக் காத்திரமாகப் பங்காற்றியவர்களை இன, மத, மொழி பேதம் கடந்து அடையாளப்படுத்தலும், சினிமாவுக்காக அங்கீகரிக்கப்பட்ட சினிமாத் திருவிழா எனும் பொதுவெளியில் வாழ்நாள் சாதனையாளர் எனும் விருதை வழங்கிக் கௌரவித்தலும் ஆகும். இதுவரை இடம்பெற்ற திரைப்பட விழாக்களில் இலங்கையின் திரைப்படத்துறையில் வெவ்வேறு தளத்தில் முக்கிய பங்காற்றிய ஆளுமைகளாகிய தர்மசேன பத்திராஜ, கா.பொ.கா.பாலசிங்கம், அத்தனாஸ் யேசுராசா, சுவர்ணா மல்லவராச்சி, கைலாயர் செல்லநைனார், சிவகுமாரன், வைரமுத்து வாமதேவன் போன்றவர்களுக்கு இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் இவ்விருது யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரைப்பட இயக்குநரான ஜோ தேவ் ஆனந்த், திரைப்பட விமர்சகர் மற்றும் திரைப்பட இதழ் ஆசிரியரான ஆதர்.ஏ.அமரசேன என்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பல நாடுகளில் திரைப்பட விழாக்கள் ஒத்திவைக்கப்பட்டு அல்லது நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்விழாவை இதன் ஏற்பாட்டுக் குழுவினர் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றமை பாராட்டுக்குரியது ஆகும்.

அதுமட்டுமன்றி இன்று இலங்கையில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் ஒரேயொரு சர்வதேசத் திரைப்படவிழா இதுவென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உலகின் பெரிய மற்றும் சிறிய நகரங்களில் நிகழும் திரைப்படவிழாக்கள் அந்த நகரங்களின் அதிநவீன பண்பாட்டு அடையாளங்களாகியுள்ளன. அவை உல்லாசப் பிரயாணத்துறையின் வளர்ச்சிக்கும் காரணமாகியுள்ளன. அங்கு திரைப்படங்களைப் பார்க்க மட்டுமல்லாமல் விழாவை ஏற்பாடு செய்வதிலும் திரைப்படத்துறையினர் பங்களிப்புகளைச் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் திரைப்பட விழா ஆரம்பித்த காலப்பகுதியில் அவ்வகையான நிகழ்வு எம்மவர்க்கு புதிது. அன்று அவ்வளவுக்கு உள்ளூர்த் திரைப்படத்துறையும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. ஆனால் கடந்த 7 வருடங்களில் பல குறுந்திரைப்படங்களையும், முழுநீளத் திரைப்படங்களையும் தயாரிக்கும் அளவுக்குத் திரைத்துறையும் கலைஞர்களும் இங்கு வளர்ந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விழாவை உள்ளூர்த் திரைப்படத்துறையினர் பெறுப்பேற்க முன்வரவேண்டும். ஏனெனில் இவ்விழாக்கள் இளம் கலைஞர்களுக்குப் பயிற்சியையும் பார்வையாளருக்கு சிறந்த சினிமாப் படைப்புகளுடனான பழக்கத்தையும் வழங்குவதற்கான அரிய சந்தர்ப்பமாகும். ஆனால், யாழ்ப்பாணத்தில் திரைத்துறை சார்ந்தவர்களின் பங்களிப்பும், பங்குபற்றுதலும் இவ்விழாவில் குறைவாகவே காணப்படுகின்றன.

இதுவொரு வகையில் முழுநேரத் தொழில்வாண்மை சார்ந்த திரைத்துறை இன்னும் உருவாகாமையும் ஒரு காரணமாக அமையலாம். ஆனாலும் பகுதி நேரமாக, ஓய்வுநேரமாகத் திரைத்துறையில் தொழிற்படுபவர்களும் திரைப்படங்களைப் பார்வையிட, கலந்துரையாட, தம்மை வளப்படுத்த, விவாதிக்க, கற்க, பார்வையாளர்களைப் புரிந்து கொள்ள, தமது பார்வையைப் பகிர்ந்துகொள்ள, சினிமாவைக் கொண்டாட அடிப்படையான ஒரு நிகழ்வு இதுவென்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

சினிமாவையும் எமது நகரத்தையும் மனித குலத்தையும் நேசிக்கும் எவரும் தவறவிடக்கூடாத ஒரு விழா இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகிதங்களில் மீட்சியில்லை

ஒரு டொலருக்கான இலங்கை ரூபாவின் நிகர்ப் பெறுமதி 230 என்றவாறாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இத்தனை வருடகால வரலாற்றில் டொலருக்கான இலங்கை ரூபாவின் நிகர்ப் பெறுமதி இவ்வளவு சரிந்திருப்பது இதுவே முதல்முறை. இதுபோக, பண்டிகைக் காலத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 38 ரூபாவை மேலதிகமாக வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. டொலரை எப்படியாவது ஈட்டியே ஆகவேண்டும் என்ற முனைப்பில் நெருக்கடிகளை– இக்கட்டு நிலைகளை – பின்னடைவுகளை தனக்குத் தானே அரசு உருவாக்கிக் கொண்டிருப்பது தெரிந்ததே. டொலருக்கு நிகர் என்று காட்டப்பட்டுள்ள இலங்கை ரூபாவின் பெறுமதியும்கூட அவ்வகையானதே!

இந்த முடிவில் இருந்து ஒருவிடயம் குன்றின் மேலிட்ட தீபம்போன்று வெளிப்படையாகத் தெரிகின்றது. அதாவது, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் தொழில்தேடிச் சென்றுள்ள இலங்கையர்களும் உண்டியல் முறையைக் கைவிட்டு, இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கிகளூடாகப் பணத்தை அனுப்பும் வகையில் அவர்களிடத்தே மாற்றத்தை உண்டாக்கவேண்டும் என்பதே இந்த அறிவிப்பின் பின்னுள்ள வியூகம். தமக்கு கூடுதலான பணம் கைக்குக் கிடைக்கின்றதே என்று அவர்கள் டொலரை வங்கிகளினூடாக அனுப்புவார்கள். ஒட்டுமொத்தமாக ஒரு டொலருக்கு 268 ரூபா வரையில் இனி அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், அவ்வாறு வழங்கப்படும் பணத்தின் பின்னால் உள்ள ஆபத்தை இந்த அரசாங்கம் உணர்ந்துள்ளதா? என்றால், இல்லை என்பதே விவாதங்களின்றி வரும் ஒற்றைப்பதில்.

இவ்வாறு டொலருக்கு மாற்றாக வழங்கப்படவுள்ள மேலதிக பணத்தை அரசு எங்கிருந்து வழங்கப்போகின்றது. பாதுகாப்புத்துறைபோன்ற பிறிதொரு ஒதுக்கீட்டில் இருந்து வெட்டி, அதற்குப் பதிலாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் நிச்சயம் அது வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால், அதைச் செய்யமுடியாத அளவுக்கு கையாலாகத்தனம் கொண்டதாகவே இந்த அரசாங்கம் இருக்கின்றது. ஓய்வில்லாமல் இரவு பகலாக உழைத்துக் கொண்டிருக்கும் பணம் அச்சிடும் இயந்திரங்கள் புதிதாக அச்சிடப்போகும் 'காகிதங்கள்தான்' இந்தத் திட்டத்தில் பயன்படுத்தப்படப்போகின்றன. புதிய காகிதக் குப்பைகளால் பணச் சுழற்சியென்பது நாட்டுக்குள் இல்லாமற்போகப்போகின்றது. பணம் (ரூபா) ஓரிடத்தில் தேங்கப்போகின்றது. பணவீக்கம் வானைத்தொடப் போகின்றது.

இலங்கை தற்போது மாட்டியுள்ள நிதிநெருக்கடியானது ஒரு சகதிபோன்றது. பிறிதொரு பலமான அமைப்பின் பிடிமானத்தின் துணையின்றி இலங்கையால் இதிலிருந்து மீளமுடியாது. சகதிக்குள் அகப்பட்ட ஒருவர், அதிலிருந்து மீண்டு வருவதற்கு எத்தனங்களை மேற்கொள்ள மேற்கொள்ள எவ்வாறு சகதி அவரை கொஞ்சம்கொஞ்சமாக ஆட்கொள்ளுமோ அவ்வாறுதான் இலங்கை அரசாங்கத்தின் செயல்களும் அமைந்துள்ளன. அரசாங்கம் மேற்கொள்ளும் பிற்போக்கான முடிவுகளால் நெருக்கடிகளும் நெருக்குவாரங்களும் இன்னுமின்னும் அதிகரிக்கின்றதே தவிர தூர விலகுவதாக இல்லை. தற்போது இலங்கைக்குத் தேவை பலமான ஒரு பின்னணி, ஓர் ஆதரவு. நெருக்குவாரங்களை போதும்போதும் என்ற அளவுக்கு ஏற்படுத்திவிட்டு அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தை நாடியோடுவதைவிட இப்போதே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதால் மீட்சிக்கான வழிகள் கொஞ்சமாவது கிடைக்கும். அதைவிடுத்து ஓயாது அச்சிட்டுத் தூக்கியெறியும் காகிதங்களில் பொருளாதார மீட்சியென்பது இம்மியும் இல்லை. அதுதான் மீட்சியென்றால் அதைச் செயற்படுத்த 'ஏழு' மூளைகள் கொண்ட நிபுணத்துவம் எதற்கு? ஓர் இயந்திர இயக்குநரே போதுமே!

### நாளொரு நல்வார்த்தை

தோல்விகள் தங்கள் வெற்றிகளுக்கான முன்னேற்பாடு என்பதை உணரும்போது மனிதர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

- ரால்ப் வால்டோ எமர்சன்




# சர்வதேச திரைப்படவிழா இன்று யாழில் ஆரம்பம்!

**யாழ்ப்பாணம், மார்ச் 9**

**யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்படவிழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று முற்பகல் 10 மணிக்கு நோகன்னஸ் நபேரின் 'கேர்வ்போல்' என்ற ஜேர்மனிய திரைப்படக் காட்சியுடன் ஆரம்பிக்கின்றது.**

'கேர்வ்போல்' திரைப்படமானது அரசியல் கோமாளிகளை மையமாகக்கொண்ட உண்மைச் சம்பவத்தைத் தழுவி எடுக்கப்பட்டது.

புகலிடக்கோரிக்கையாளன் ஒருவனிடமிருந்து பெறப்படும் ஈராக்கில் சதாம் உசைனின் இரகசிய உயிரியல் ஆயுத உருவாக்கம் பற்றிய செய்தி, அதனை உறுதிப்படுத்த முயற்சிக்கும் ஜேர்மனிய உளவுத்துறையின் அமெரிக்க உளவுத்துறையுடனான போட்டி, அதன் பின்னாலான அரசியல், கட்டுக்கதையாக இருந்த உயிரியல் ஆயுத உருவாக்கம்பற்றிய உண்மை அவிழ்கையில் உலக அரசியல் அரங்கில் நிகழும் பல மாற்றங்களையும் நிகழ்வுகளையும் 'கேர்வ்போல்' திரைக்கதை பதிவுசெய்திருக்கிறது.

அடுத்து பி.ப. ஒரு மணிக்கு கௌரவ் மதனின் அறிமுக இந்தியத் திரைப்படமான 'பாரா பை பாரா' காட்சிப்படுத்தப்படும். இது வாரணாசி மலைத்தொடரில் நிகழும் இறப்புக்களைப் படம்பிடிக்கும் புகைப்படக்கலைஞரை மையமாகக் கொண்டதாகும். வாழ்வினதும் மரணத்தினதுமான இவரது பயணத்தில் அவரது இறப்பு மகனால் ஆவணப்படுத்தப்படுகிறதா? என்பதை இந்தத் திரைக்கதை பேசுகின்றது.

மாலை 4.45மணிக்கு அய்சானா காசிம்பேக்கின் நெறியாள்கையில் உருவான கஜகஸ்தானிய அறிமுகத் திரைப்படமான 'பயர்' காட்சிப்படுத்தப்படும்.

இது இளவயது நடுத்தரவர்க்க குடும்பத்தவர்களின் பிரதிநிதியாகச் சித்திரிக்கப்படும் ரோலிக் என்பவனின் அன்றாட வாழ்க்கைக்கான போராட்டங்களைப் பேசுபொருளாகக் கொண்டு நகரும் திரைப்படத்தில், மனிதனின் பிறப்பு முதல் திருமணம், இறப்பு என வாழ்க்கையின் ஒவ்வொரு பாகமும் எவ்வாறு மீளமுடியாக் கடன்களால் நெருக்குதலுக்குள்ளாகிறான் என்பது பேசப்படுகின்றது. அத்துடன், நண்பகல் 12.30 மற்றும் பி.ப. 3.30மணிக்கு விருதுக்காகப் போட்டியிடும் போர்த்துக்கல், கம்போடியா, இலங்கை, இந்தியா மற்றும் ரஷ்யா நாடுகளின் குறுந்திரைப்படங்களும் இலவசமாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ம)

# புலம்பெயர்ந்தோர் அனுப்பும் டொலருக்கு ஊக்கத்தொகை

கொழும்பு, மார்ச் 9

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் நாட்டுக்கு அனுப்பும் ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கும் புத்தாண்டு காலத்தில் 38 ரூபா ஊக்கத்தொகை வழங்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தொழிற்றுறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரவையில் சமர்ப்பித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் டொலர் நெருக்கடியைத் தீர்க்கவும் புலம்பெயர் தொழிலாளர்களின் அந்நியச் செலாவணி வருமானத்தை அதிகரிக்கவுமென இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### நாளை

10.03.2022
வியாழக்கிழமை
மாசி 26

சுபநேரம் : 07.53 - 09.23
ராகுகாலம்: 01.53 - 03.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சந்தையில்

# கச்சா எண்ணெய் விலை 300 டொலரை எட்டும்

*ரஷ்யா எச்சரிக்கை*



மொஸ்கோ, மார்ச் 9
ரஷ்யாவில் இருந்து உலக நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கு தொடர்ந்து தடை விதித்தால், சந்தையில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 300 டொலராக அதிகரிக்கும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.
உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், பிரிட்டன், கனடா மற்றும் ஜப்பான் ஆகியன ரஷ்யாமீது பொருளாதாரத் தடைகளை விதித்தன. மேலும் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு மேற்கத்திய நாடுகள் தடை விதித்துள்ளன.
இதனால் சர்வதேச சந்தையில்கச்சாஎண்ணெய்விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தப் பின்னணியிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளது ரஷ்யா.
ரஷ்யாவின் துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவாக் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு மேற்கத்திய நாடுகள் தடை விதித்துள்ளதால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 300 டொலரை எட்டும். இது உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு பேரழிவை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் கச்சா எண்ணெய் விலை எந்தளவுக்கு உயரும் என்பதைக் கணிக்கமுடியாது" -என்றார். (ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதையும் மிகுந்த கவனத்துடன் செய்து பயன் அடைவீர்கள். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். கணவருக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்தசில நாள்களாக இருந்து வந்த மனஉளைச்சல்தீரும். என்றைக்கோ உழைத்த பலனை இன்று பெற்று மகிழ்வீர்கள். கடன் வசூலாகும். மனஅழுத்தம் நீங்கும்.

**மிதுனம்:** பயணத்திட்டம் ஒன்றை தீட்டுவீர்கள். பிறருக்கு ஆலோசனை சொல்வீர்கள். நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**கடகம்:** செலவுக்கேற்ற வருமானம் வரும். தேவையற்ற பயம் வேண்டாம். மனைவிக்கும், மகளுக்கும் ஆபரணங்கள் வாங்கிக் கொடுத்து மகிழ்விப்பீர்கள். தந்தையின் செயல் ஒன்று உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**சிம்மம்:** ஆன்மிக நாட்டம் கூடும். வேண்டுதலை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் மேலிடத்தின் பாராட்டு தலைப் பெறுவார்கள். சேமிப்பை அதிகரிப்பதில் முயற்சி செய்வீர்கள்.

**கன்னி:** திருமணம் பற்றிய முயற்சியில் அவசரம் காட்ட வேண்டாம். பிறரை அனுசரித்துச் செல்வதுதான் உங்கள் முன்னேற்றத்துக்கு நல்லது. சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**துலாம்:** எதிர்காலம் பற்றிய முனைப்பான சிந்தனை இன்று மேலோங்கும். கணவன் – மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். அனுகுமுறையால் இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர் இடையே இருந்த பிரச்சினை தீரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பெற்றோருக்குப் பணம் வரும். பிறரைப் புரிந்துகொள்வீர்கள். எதிர்ப்புக்குப் பின் காரியம் நிறைவேறும்.

**தனுசு:** நீங்கள் உண்மையாகச் செய்த செயல்கள் நன்மை தரும். மற்றவர்கள் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மனவருத்தங்கள் வந்து போகும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** மகன், மகள் மூலம் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குழந்தைகளின் மூலம் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். உறவுகளால் நன்மை உண்டு: தந்தையின் உடல்நலம் மேம்படும்.

**கும்பம்:** பொழுதுபோக்குகளில் ஆர்வம் ஏற்படும். பணிகளில் கவனம் தேவை. உடல்நலனில் கவனம் தேவை. எதிலும் அலட்சியம் காட்ட வேண்டாம். உங்கள் தகுதிக்கு ஏற்ற வேலை கிடைக்கும்.

**மீனம்:** குடும்பத்துக்காகச் செலவுகள் செய்து அவர்களது அன்பைப் பெறுவீர்கள். தீயோரிடம் இருந்து விலகி நிம்மதி அடைவீர்கள். நல்ல மனம் கொண்ட உறவினர்களால் சந்தோஷம் கூடும்.

முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



அன்னை மடியில் 05.06.1972
ஆண்டவன் அடியில் 20.03.2021
அமரர் கந்தசாமி கணேசராசா
(கணேஸ்)
(கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)
திதி : பூர்வபக்க ஸப்தமி (09.03.2022)
குடும்பத்தின் குலவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எங்கள் குலவிளக்கே!
தரணியில் எங்களை தவிக்கவிட்டு தனியாக
நீங்கள் மட்டும் எங்கு சென்றீர்கள் அப்பா!
நடந்தது கனவாகாதா என ஏங்குகின்றோம்
தந்தை தாய்க்கு தலைமகன் இல்லை
இல்லாளுக்கு தலைவன் இல்லை
பிள்ளைக்கு தந்தை இல்லை
சகோதரர்களுக்கு அண்ணன் இல்லை
ஆலமரம்போல் விருட்சமாய் இருந்து வாழவேண்டிய
உங்களை காலன் வந்து கண்ணெதிரே கவர்ந்து
– சென்றதேனோ?
தேசத்து உறவெல்லாம் நின் துயரில் உறங்காதிருந்து
கொண்டனரே! ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஓடி
மறைந்தாலும் உங்கள் ஆத்ம சாந்திக்காகவே
இறைவனிடம் வேண்டுகின்றோம்
162 ஆம் கட்டை A-9 வீதி,
உமையாள்புரம், பரந்தன்.
என்றும் உங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்

# உக்ரைன் சுமி நகரில் குண்டுவெடிப்பு

**9 பேர் வரையில் உயிரிழப்பு**

கீவ், மார்ச் 9
உக்ரைனிலுள்ள சுமிநகரில் நேற்று இடம்பெற்ற ரஷ்யாவின் குண்டுத்தாக்குதலில் 9 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
உக்ரைன் - ரஷ்யா இடையே நாளுக்குநாள் போர் உக்கிரமடைந்துவருகிறது. உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்து 13 நாள்களைக் கடந்துவிட்டது.
ரஷ்யப் படைகள் முக்கிய நகரங்களில் ஏவுகணை, வான் தாக்குதல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.
அத்துடன் போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன் - ரஷ்யா இடையே மூன்றாவது கட்ட அமைதிப் பேச்சு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எனினும் அந்தப் பேச்சில் சாதகமான எந்தமுடிவும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தநிலையில், உக்ரைனின் சுமி நகரில் ரஷ்யா மேற்கொண்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 9 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)

# உலக நாடுகளே கைகொடுங்கள்

*உக்ரைன் ஜனாதிபதி வேண்டுகோள்*

உலக நாடுகள் இனியும் இந்தப் போரை வேடிக்கை பார்க்கக்கூடாது. எங்களுக்கு உதவ முன்வரவேண்டும். எங்களுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்கவேண்டும். நான் இறந்தாலும் ஆட்சி தொடர்ந்து நடைபெறும்.
இவ்வாறு உக்ரைன் ஜனாதிபதி ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.
உக்ரைன் வான்பரப்பில் விமானங்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கவேண்டும் எனத் தொடர்ந்து நாம் வலியுறுத்துகிறோம். ஆனால், நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் எமது கோரிக்கையை ஏற்கத் தயங்குகின்றன. இதனால் உக்ரைன் மக்கள் அடுத்தடுத்து பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர்.
ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைந்து எங்களுக்கு அதிக போர் விமானங்களை வழங்க வேண்டும். எங்கள் மண்ணை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம். ஒருபோதும் பின்வாங்கும் பேச்சுக்கே இட மில்லை - என்றார். (ச-இ)

# இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் நாளை துருக்கியில் அமைதிப் பேச்சு

மொஸ்கோ, மார்ச் 9
போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் உக்ரைன்- ரஷ்யா வெளியுறவு அமைச்சர்கள் இடையே நாளை 10ஆம் திகதி துருக்கியில் பேச்சு நடத்தப்படவுள்ளது.
உக்ரைனின் முக்கிய நகரங்களில் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல், வான்வழித்தாக்குதல், பீரங்கித் தாக்குதல் என்பவற்றை நடத்தி, அவற்றை உருக்குலைய வைத்து வருகிறது.
அதேவேளை, உக்ரைனும் நாட்டைக் காக்க ஈடுகொடுத்துப் போராடி வருகிறது. போரை முடிவுக்குக் கொண்டுவர பல்வேறு தரப்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்தநிலையில் ரஷ்யா- உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நாளை 10 ஆம் திகதி துருக்கியில் சந்தித்துப் பேசவுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
இரண்டு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்களும் நேரடியாகச் சந்தித்துப் பேசவுள்ளதால், போர் முடிவுக்கு வருமா? என்ற எதிர்பார்ப்புகள் எழுந்துள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் எழுச்சிக்கு வித்திட்ட மண்ணில் இன்று வன்முறை

## டென்மார்க் மகளிர் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 9

**தேசியத் தலைவரின் வழிகாட்டலில், அனைத்துத்துறைகளிலும் தம்மை வளர்த்து, தமிழ்த் தேசிய உணர்வுகளையும் கட்டியெழுப்பி, பெண் எழுச்சிக்கு வித்திட்டவர்கள் தமிழீழப் பெண்கள். இன்று அவர்களே வன்முறைகளை அதிகம் சந்தித்துள்ளனர்.**

மகளிர் தினத்தை முன்னிட்டு, டென்மார்க் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

போரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இன்று பல்லாயிரம் உருவாகியுள்ளன.

தாயகத்தில் பெண்கள் அனுபவிக்கும் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான ஒடுக்குமுறைக் கொடுமைகள் விவரிக்க முடியாதவை.

பெண்கள்மீதான வன்புணர்வு, படுகொலைகள் பல நன்கு திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டன.

சிங்களப் படைகளாலும், இந்தியப் படைகளாலும் மிகமோசமாக தமிழீழப் பெண்கள் பாதிக்கப்பட்டனர்.

குற்றஞ்செய்தவர்கள் உயர் பதவிகளிலும், நாடு நாடாக சுதந்திரமாகவும் சுற்றித்திரிந்து சுகபோக வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால், எங்கள் தமிழ் மக்கள் ஒரு குற்றமும் செய்யாமல் அரசியல் கைதிகளாக சிறைகளில் வாழ்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. இவர்களுக்கான விரைவான தீர்வொன்றை சர்வதேசத்திடம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஒரு தனிமனிதனின் அடிப்படை உரிமையை மதிக்காமல் தமிழ் மக்கள் மீது அடக்குமுறையைப் பாவித்து, தொடர்ந்தும் இன அழிப்பைச் செய்து வருகின்ற சிங்கள அரசை, வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (ம-4-இ)



மகளிர் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நேற்று வழங்கப்பட்டது. (ம-4-27-20)

## இலட்சியத்தை நோக்கிய எமது பயணம் ஓயாது

### மாவை தெரிவிப்பு

எந்த இலட்சியத்துக்காக எமது இளைஞர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தார்களோ, அந்த இலட்சியத்தை எட்டும் வரையில் எமது பயணம் ஓயாது என்று தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மகளிர்தின நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பிற்பாடு, தமிழர் தாயகப் பகுதிகளில், 90 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக நாம் ஆட்சியாளர்களிடத்திலே பேசினோம்.

அதனடிப்படையில் வரவு- செலவுத்திட்டத்தில், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்களுக்காக நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பெண்களின் விடுதலை மாத்திரம் அல்ல, நம் இனத்தின் விடுதலைக்காகவும், நம் தேசத்தின் விடுதலைக்காகவும் தமிழரசுக்கட்சியின் மகளிர் அணியினர் போராடுவர் -என்றார். (ம-4-246)

## சிறுமியுடன் குடும்பம் நடத்திய இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 9

15 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில், 18 வயதுடைய இளைஞன் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியின் பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து இளைஞனும் சிறுமியும் கைது செய்யப்பட்டனர்.

சிறுமியை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞன் நீதிமன்றில் முற்படுத்தப்படுவான் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-23)

## பெண்கள் வன்முறையை குடும்பத்தில் தடுங்கள்

### மாவட்டச் செயலர் ஆலோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 9

சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை முதலில் குடும்பத்திலிருந்து கட்டுப்படுத்த வேண்டுமென்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதைய நிலையில் ஒவ்வொரு வருடமும் பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துச் செல்கின்றது.

எனவே ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து துஷ்பிரயோகத்தைத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே ஏனைய மட்டங்களிலும் மாற்றத்தைக் கொண்டுவரும்.

இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு என தனியான ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண, மாவட்ட மட்டங்களிலும் திணைக்களங்கள் செயற்படுகின்றன. அத்துடன் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும் -என்றார். (ம-4-27)



## மகளிர் தினமும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

'நாடும் தேசமும் உலகமும் அவளே' எனும் தொனிப்பொருளில் மகளிர் தினமும், விற்பனைக் கண்காட்சியும் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்டச் செயலர் க.மகேசனின் வழிகாட்டலில், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான கண்காட்சி, விற்பனைஆகியன இடம்பெற்றன. கண்காட்சியை மாவட்டச் செயலர் ஆரம்பித்தார். இந்நிகழ்வில் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் கலந்துகொண்டார். (ம-4-27)



முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும், தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகச் செய்தி தொடர்புச் செயலாளர் கே.எஸ்.இராதாகிருஷ்ணனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவின் தற்கால நிலைமைகள் தொடர்பிலும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (ய-246)





## பெண்கள் கௌரவிப்பு

'பால்நிலை பாரபட்சத்தைத் தகர்ப்போம்' எனும் தொனிப்பொருளில், மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில், பெண் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கலந்துகொண்டார்.

நிகழ்வில் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் தொழில் முயற்சியாளர் [illegible] பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. (ம-4-213-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைதீவு

# அந்தோனியாரைத் தரிசிக்க 3 தடுப்பூசிகளும் கட்டாயம்

**கிளிநொச்சி, மார்ச் 9**

**பாலைதீவு- அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கு, கொரோனாத் தடுப்பூசியின் 3 டோஸ்களையும் செலுத்தியோரே செல்ல அனுமதிக்கப்படுவர்.**

எதிர்வரும் 19ஆம் திகதி திருவிழா இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடல் போக்குவரத்து, உட்கட்டமைப்பு, முகாம்கள் அமைத்தல், உணவு, மருத்துவம் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போதே தடுப்பூசியின் 3 டோஸ்களையும் செலுத்தியோரே ஆலய வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4-113)

கிளிநொச்சியில்

# 1,195 ஹெக்ரேயரில் இம்முறை சிறுபோகம்

கிளிநொச்சி, மார்ச் 9

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தமுறை சிறுபோகத்தில், சுமார் ஆயிரத்து 195 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இயற்கை உரத்தைப் பயன்படுத்தி நஞ்சற்ற விவசாயம் மேற்கொள்ளவேண்டுமென்ற அரசின் கொள்கைகளுக்கு அமைவாக, அங்கீகாரம் பெற்ற இயற்கை உரக் கம்பனியுடனான கலந்துரையாடல், மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

(ம-4-113)

## தடுப்பூசித் திட்டத்தை வலுவானதாக மாற்றுக

கொழும்பு, மார்ச் 9

கொரோனாத் தடுப்பூசித்திட்டம் தொடர்பில், மக்களுக்கு உண்மை நிலைமைகளைத் தெரிவித்து, அவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று சுவாச நோய்கள் சிகிச்சை ஆலோசகர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலகுவில் தொற்று ஏற்படக்கூடிய பலர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை.

3 தடுப்பூசிகளும் தொற்று மற்றும் மரணத்திலிருந்து எவ்வளவு பாதுகாப்புத் தருகின்றன என்பதை மக்கள் அறிந்து கொள்ளவில்லை.

அவர்களுக்கு பக்கவிளைவுகள் குறித்த அச்சமும் உள்ளது. தடுப்பூசி செலுத்தாதோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டால் என்ன நடக்கும்? பக்க விளைவுகள் என்ன என்று அவர்களுக்கு தெளிவூட்ட வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4-ரி1)

## கஞ்சாவுடன் கைது நபருக்குத் தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 9

கஞ்சாவைக் கைமாற்றும்போது கைதுசெய்யப்பட்ட நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், தப்பியோடிய நபரைக் கைது செய்யுமாறு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

மீசாலை பழைய ரயில் நிலையத்துக்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்தநபர் கைது செய்யப்பட்டார். சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பப்பட்டபோது தண்டம் விதிக்கப்பட்டது. (ம-4-9)



சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 24ஆவது மகளிர் தின விழா, சங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் இ.சசீலன், மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் நா.பஞ்சலிங்கம், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மற்றும் வங்கிகளின் முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-4-9)



## இளம் அதிபரைக் கோரி கையெழுத்துப் போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 9

கிளிநொச்சி- கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இளம் அதிபரை நியமிக்குமாறுகோரி, பெற்றோர் நேற்று பாடசாலையின் பிரதான வாயிலில் கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போருக்குப் பின்னர் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஓய்வுநிலைக்கு குறுகிய காலத்தைக் கொண்டவர்களாகவே நியமிக்கப்பட்டனர்.

அவர்களின் ஓய்வு காலத்துக்குள் பாடசாலையை வளர்ச்சி பாதைக்குக் கொண்டுசெல்லமுடியாது. எனவே இளம்துடிப்புள்ள அதிபரை நியமித்துத் தாருங்கள் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

பெறப்படும் கையெழுத்துப் பிரதிகளை, வடமாகாண ஆளுநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-4-113)

## நிர்வாகக் கூட்டமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மார்ச் 9

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் புதிய நிர்வாகக் கூட்டமும், தற்கால நிலைவரம் தொடர்பான கலந்துரையாடலும் யாழ். தனியார் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் குரல் கொடுத்து வரும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினர் தற்போது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடினர்.

அரசையோ, அமைச்சரையோ நம்பாது மாற்றுவழிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

(ம-4-23)

# உங்கள் சுயநல அரசியலுக்காக போராட்டத்தைச் சிதைக்காதீர்கள்

*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 9

உங்களது சுயநல அரசியலுக்காக, வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முன்னெடுக்கும் போராட்டத்தைச் சிதைக்க வேண்டாம் என்று உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

> "தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது சுயநல அரசியலுக்காக பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களைச் சிதைத்து இலாபம் தேடி வருகின்றது."

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமது சுயநல அரசியலுக்காக பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களைச் சிதைத்து இலாபம் தேடி வருகின்றது. தமது வங்குரோத்து அரசியலை நிமிர்த்துவதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் செயற்பட்டு வருகின்றனர்.

தேர்தல் வெற்றிக்கு முன்னர் சரிந்து கிடந்த அரசியல் நிலையை மீளக் கட்டியெழுப்புவதற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும், அவர்களது உணர்வுகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் ஊடாக எமது அமைப்பு கடுமையான கருத்தியல் தொடர்பில் பலமடைந்துள்ள நிலையில், அதற்குத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தங்களது கட்சிச் சாயத்தைப் பூசித் தமக்கு வெள்ளையடிக்க முனைகின்றனர்.

போலியான அரசியல் தலைமைக்கு வாக்களித்தமையையிட்டு மக்கள் தலைகுனிய வேண்டிய நிலைக்கு இவர்களின் செயற்பாடு தற்போது காணப்படுகின்றது.

சுயநல அரசியலுக்காகப் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் செயற்பாட்டைச் சிதைக்கும் இவர்களின் செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கப்படவேண்டியவை -என்றுள்ளது. (ம-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கரான பசிலிடமிருந்து அதிகாரங்களை மீட்டெடுங்கள்

## விமல் அறைகூவல்



**கொழும்பு, மார்ச் 9**

**அசிங்கமான அமெரிக்கரான நிதியமைச்சர் பஸில் ராஜ பக்சவின் பிடிக்குள் இருந்து அரச அதிகாரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் எனக்கு எந்தவித கவலையும் இல்லை. கடினமான சூழ் நிலையில் மிகவும் அர்ப்பணிப்புக்கு மத்தியிலேயே மக்கள் ஆணையை நாம் பெற்றுக்கொடுத்தோம். அதனை மீறும் வகையிலேயே நிதியமைச்சர் பஸில் பொருளாதாரத்தைச் செயற் படுத்துகின்றார். இது தொடர்பில் மௌனம் காக்க எம்மால் முடியாது. அதனால் தான் எதிர்ப்பை வெளியிட்டோம். ஜனா திபதியோ, பிரதமரோ இந்த நாட்டை ஆளவில்லை. நெருக்கடிக்குள் தள்ளும் வகையில் பஸிலே செயற்படுத்திக்கொண்டிருக்கின்றார். அவரின் பிடிக்குள் இருந்து அரச அதிகாரத்தை மீட்க வேண்டும்- என்றார். (ம-4-44)

# அந்நியச் செலாவணி 2.31 பில்லியன் டொலர்

கொழும்பு, மார்ச் 9


நாட்டில் கடந்த பெப்ரவரி மாதத்தில் அந்நியச் செலாவணியின் கையிருப்பு 2.31 பில்லியன் டொலராகக் காணப்பட்டது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. தங்கக் கையிருப்பு 98 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகிறது எனவும் மத்திய வங்கியின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-இ)

# வாகனப் பயிற்சி 30 பேர் ஆர்வம்

சாவகச்சேரி, மார்ச் 9

கனரக வாகனப் பயிற்சி வகுப்பில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

இவர்களுக்கான ஒரு மாதப் பயிற்சிகள் குருநாகலில் நடைபெறவுள்ளன. ஜே.சி.பி மற்றும் டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்கள் திருத்தும் பயிற்சிகளே இவ்வாறு இடம்பெறவுள்ளன. (ம-4-9)



# நெதுன்கமுவ ராஜாவை தேசிய பொக்கிசமாக்குக

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, மார்ச் 9

நெதுன்கமுவ ராஜா என்ற யானையை தேசிய பொக்கிசமாகப் பிரகடனப்படுத்துமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச் சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள் ளார்.

எதிர்காலச் சந்ததியினரின் பார்வைக்காக நெதுன்கமுவராஜா யானையின் உடலைப் பாதுகாக்குமாறும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கென தேசிய அருங்காட்சியக அதிகாரிகள் குழுவொன்று கம்பஹா வெலிவேரிய நெதுன்கமுவ பகுதிக்கு விரைந்துள்ளது.

கண்டி, ஈசல பெரஹரவில் அதிக தடவைகள் புனித தந்த தாதுவை சுமந்து சென்ற இலங்கையின் மிகவும் உயரமான குறித்த யானை நேற்றுமுன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# கோப் குழுவின் முதல் அறிக்கை நாடாளுமன்றில்

கொழும்பு, மார்ச் 9

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முதலாவது அறிக்கை, அதன் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத்தால் நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

குழுவால் அழைக்கப்பட்ட மற்றும் அதன் ஊடாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 12 அரச நிறுவனங்கள் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பதாவது நாடாளுமன்றின் முதலாவது கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையால் சமர்ப்பிக்கப்பட முடியாத இந்த அறிக்கையை, இரண்டாவது கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்கு கோப் குழு உறுப்பினர்கள் அனுமதி வழங்கியிருந்தனர். (ம-4-இ)

# எரிபொருள் நெருக்கடியால் உல்லாசத்துறை பாதிப்பு

கொழும்பு, மார்ச் 9

உல்லாசப் பயணத்துறை மின்சாரத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சமையல் எரிவாயு போதாமை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை விடுதிகள் சங்கத் தலைவர் சாந்திகுமார் தெரிவித்துள்ளார்.

பதிவுபெற்ற விடுதிகள் எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்வதற்கும், மின்சாரத் தடைவிலக்குதலுக்கும் அனுமதி பெற்றுள்ளது. எனினும் சில சிறிய விடுதிகள்அ வதியுறுகின்றன. நீண்ட நாள்கள் தங்கியிருக்கவேண்டிய உல்லாசப் பயணிகள் இந்த நெருக்கடிகள் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4,ரி1)

# கண்காட்சி

சாவகச்சேரி, மார்ச் 9

ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப்பொருளியல் பயிற்சிகளை நிறைவுசெய்தவர்களால் ஆக்கப்பட்ட, பொருள்களின் கண்காட்சி நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில். நடைபெறும். பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர்.இ.சசீலன் கலந்துகொள்வார்.(ம-4-9).


## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து குமரகுருநாதன்



யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து குமரகுருநாதன் அவர்கள் நேற்று (08.03.2022)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கனகரத்தினம் அற்புதமலர் தம்பதியரின் மருமகனும், தினேஸ், கேமன், பிரேமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாணுவின் அன்பு மாமனும், ஆதிரனின் அன்புப் பேரனும், கைலநாதன், தவநாதன், குகநாதன், சரோஜாதேவி, வசந்தாதேவி, யோகன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.03.2022) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் தெற்கு, இருபாலை.** **தகவல் குடும்பத்தினர்.**

## கண்ணீர் காணிக்கை

தோற்றம் 24 - 08 - 1930



மறைவு 06 - 03 - 2022

எமது ஆலயத்தின் நீண்ட கால பிரதம அர்ச்சகராக விளங்கியவரும் மதிப்பிற்குரியவருமான

**அமரர் பிரம்ம ஸ்ரீ முத்துச்சாமி ஐயா பாலகுருசாமி சர்மா**

ஆயிரம் பிறை கண்ட அதி உத்தமரே
அன்பினால் அனைவரையும் அரவணைத்த ஐயாவே
எங்கு காண்போம் இனி நாம்
ஆலயப் பணிகள் சிறந்திடவே
அரும் பணியாற்றிய அன்பின் குருவே
எங்கு சென்றீர்! எங்கு சென்றீர்!
பாரினிலே நீர் வாழ்ந்து
பண்பிலே உயர்ந்து நின்று
எல்லோர் மனதிலும் இடம் பிடித்து
இனிதாய் வாழ்ந்த காலம் மறக்குமோ!
இத்தனையையும் நினைத்து ஏங்குகின்றோம் ஐயாவே!
சுழிபுரம் பதியிலே அமைந்த
ஸ்ரீ கதிர் வேலாயுதர் ஆலயத்தில்
அன்புடனும் பக்தியுடனும் பூஜை செய்து
அடியவர்கள் மனதில் இடம்பிடித்த ஐயாவே!
எங்கு காண்போம் இனி நாம்...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(CR 8024) (4/6)

பிரிவால்துயருறும்
சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், பரிபாலன சபை, சங்காபிஷேக சபை.

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் - 2022



## வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாக நம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18.03.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. உற்சவகால வியாபார நடவடிக்கைகளுக்காக கடைகள் ஏலத்தில் விடுதல் எதிர்வரும் 13.03.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும். வியாபாரம் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 8023A(4/6)

**ஆலய பரிபாலன சபை, நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் 18.03.2022

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப்பொங்கல் எதிர்வரும் (11.03.2022) வெள்ளிக்கிழமை விளக்குவைக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி (18.03.2022) வெள்ளிக்கிழமை பொங்கல் உற்சவம் பகல், இரவாக சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- 11.03.2022 விளக்கு வைக்கும் நாளிலிருந்து அடியார்கள் நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து சேவைகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- பண்டம் வழமை போன்று மீசாலை, புத்தூர் சந்தி பண்ட மரவடி வரை சென்று வருவதுடன் வழமையான விடயங்கள் அனைத்தும் அங்கு இடம் பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
- ஆலயக்கொடிகளுடன் உழவு இயந்திரத்தில் வருபவர்களுக்கு மட்டும் தண்டல் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.
- ஆலயத்திற்கு வருபவர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்கவும்.
- அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை, நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.

(CR 8023B) (4/6)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 - 09 - 1950



இறப்பு 05 - 03 - 2022

### திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு சரஸ்வதி அவர்கள் கடந்த (05.03.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், ராஜசேகர் (சேகர்), ஜெயலட்சுமி (பவா), அருணா, கமலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், உஷாநந்தினி, பகீரதன், வேதியன் ஆகியோரின் மாமியாரும், நவரட்ணம், ராசாத்தியம்மா, குமாரசாமி, பரிமளம், குணரட்ணம், பாக்கியலட்சுமி, ஜெயரட்ணம், தயாநிதி, ரேவதி (லதா), நிர்மலா (கீதா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரெத்தினம், சோமசுந்தரம், பூமணி, யோகம்மா, வனிதமலர் ஆகியோரின் மைத்துனியும், அபிநயா, அஞ்சனா, மதுஷா, தேனுஷா, அனேகா, அத்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 83, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர் 075 620 4517, 077 661 7491

(CS 18753)(4/6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 - 08 - 1945

மறைவு 30 - 01 - 2022



தோற்றம் 12 - 05 - 1947

மறைவு 07 - 02 - 2022

அமரர் **சின்னத்தம்பி மகாலிங்கம்**
(இ.போ.ச பேருந்து முன்னாள் சாரதியும், யாழ். மாவட்ட கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய மேற்பார்வையாளரும்)

அமரர் **மகாலிங்கம் தவமணி**

கடந்த 30.01.2022 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம் அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம் அவர்களதும், 07.02.2022 அன்று சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம் அமரர் மகாலிங்கம் தவமணி அவர்களதும் அந்தியேட்டிக்கிரியை கடந்த 07.03.2022 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.03.2022) புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வும் நடைபெற உள்ளதால் தாங்களும் அந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர், நண்பர்களுக்கும், பத்திரிகை, பதாகைகள், துண்டுப்பிரசுரம், இணையத்தளம் போன்றவற்றின் ஊடாக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இன்றுவரை [illegible] உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பட்டினசபை வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்

(CS 18794) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் சின்னம் “அழுகிய முட்டையா?”

## சபையில் பொன்சேகா விசனம்

கொழும்பு, மார்ச் 9

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம் மீது ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமையில் அழுகிய முட்டைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சின்னம் “அழுகிய முட்டையா?”. மக்களை ஒடுக்குவதற்காக அரசு அடக்குமுறையைக் கையாள்கின்றது.

இவ்வாறு ஐக்கிய சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போது அவர் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகம்மீது ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமையில் குண்டர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அழுகிய முட்டை வீசியும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன. இதற்கு அரச அனுசரணையும் இருப்பதுபோலவே தெரிகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டுவரும் நிலையில், மனித உரிமைகள் இங்கு மீறப்படுகின்றன. ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, மக்களின் எதிர்ப்பை வெளிக்காட்டவே ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டார். தற்போது அவர் பழிவாங்கப்படுகின்றார். அவரின் வீட்டை குண்டர் குழு சுற்றி வளைத்துள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாட்டு மக்கள் இன்று வரிசைகளில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது. மக்களை ஒடுக்குவதற்காக குண்டர் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன - என்றார். (எ-44)


## தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு **மேசன், கூலியாட்கள், பெயின்டர் (Painter), சாரதி (Driver)** மற்றும் **தொழில்நுட்ப உத்தியோகத்தர்(T.O)** தேவை.

**077 592 5371, 076 316 5730**
E.mail:- jenoshanark@gmail.com

**STP® WALK IN INTERVIEW**
Your Partner in IT Solution

STP கணனி நிறுவனமானது கடந்த 25 வருடகாலமாக வடக்கில் கணனி விற்பனை மற்றும் கணனிசார் சேவைகளை அரச, தனியார் நிறுவனங்களிற்கு வழங்கி வரும் ஒரு முன்னணி நிறுவனமாகும்.

இதன் ஆளணி வலுவை விருத்தி செய்வதற்காக தகுதியுள்ள இளைஞர் யுவதிகளின் சேவை கோரப்படுகின்றது.

தெரிவு செய்யப்படுவோர் சிறந்த ஊதியத்தையும் ஏனைய சலுகைகளையும் அனுபவிக்கலாம். கீழே கோரப்பட்ட நியமனங்களிற்கு தாங்கள் தகுதியுள்ளவர் என கருதுமிடத்து 12-03-2022 சனிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு இல 49, 1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அலுவலகத்திற்கு நேரில் அழைக்கப்படுகின்றீர்கள்

1.Hardware Technician
* ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவம்
* வன்பொருள் துறையில் NVQ சான்றிதழ்
* மோட்டார் வாகன ஓட்டுனர் உரிமம்

2 Receptionist- பெண்.
* உயர்தரத்தில் சித்தி
* ஆங்கிலத்தில் புலமை
* மூன்றாம் மொழியறிவு-மேலதிக தகமையாகும்

மேலதிக தகவலிற்கு அழையுங்கள்:
0212228147, 0212222674

## கார்கள்/ வான்கள் வாடகைக்கு தேவை

கார்கள்/ வான்கள் சாரதி இல்லாமல் மாதாந்த நீண்ட கால குத்தகைக்கு தேவை.
**075 090 6486**
(CS 18791) (4/6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 38 வயது திருமணமாகாத மண மகனுக்கு மண மகள் தேவை. (CS 18788) (4/6)

தொடர்புக்கு:-077 905 8615
வைபர்/ வாட்ஸ்அப்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் உஷன் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு **பண்ணை முகாமையாளர் மற்றும் கூலியாட்கள் தேவை.**

**077 592 5371, 076 316 5730**


## பெயர் மாற்றம்

அல்வாய் மேற்கு எனும் முகவரியில் வசிக்கும் **அன்ரனி ஜெனிற்றா** என்கிற எனது பெயரினை இன்று முதல் **அன்டனி ஜெனிட்டா** என மாற்றிக் கொள்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசுக்கு அமைவாக அறியத் தருகின்றேன்.

(NE 18224) (3/6) **வி. அன்டனிஜெனிட்டா**

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2020/2021
### Bachelor of Business Management Degree Programme – 2020/2021
### புதிய அனுமதி – 2022

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருட கால வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர் களைத்தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

- க.பொ.த. (உ/த) பரீட்சை – 2019 அல்லது அதற்கு முன்னர் எப்பாடப் பிரிவில் இருந்தாயினும் சித்தியடைந்திருப்பதுடன் பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% ஆன புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

*அல்லது*

- ஏதாவது ஒரு பிரிவில் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேல் பூர்த்தி செய்த வர்கள் (சித்தியடைந்த வருடம் 2019 அல்லது அதற்கு முன்)

*அல்லது*

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**வியாபார முகாமைத்துவமாணி முதலாம் வருட தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல் :**

- பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்பட்ட, 1ம் வருடத் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருவதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள், வியாபார முகாமைத்துவமாணி இரண்டாம் வருட கற்கைநெறிக்கு, உரிய தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு :** **http://www.codl.jfn.ac.lk/wp-content/uploads/2022/02/Exemption.png** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் உள்வாரியாக பட்டப்படிப்பொன்றுக்காக பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

முக்கிய குறிப்பு :
மாணவர் தெரிவு :

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டின் மூலமும் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை)

*அல்லது*

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை 050122150001411 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்கள் நேரடியாக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்கலாம்.

*அல்லது*

பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு – 2020/2021" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 08.04.2022** (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**மேலதிக விபரங்களுக்கு : 021 222 3612** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**08.03.2022** (CR 37606) (3/6) **பதிவாளர்,**

## துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 19.06.1944 மறைவு 07.03.2022

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் வாழ்நாள் நிர்வாக சபை உறுப்பினர் **அமரர்.சி.இரத்தினம்** அவர்களது சிரேஷ்ட புதல்வி

**வரலட்சுமி பத்மநாதன்**
(ஓய்வுநிலை பட்டதாரி ஆசிரியை)

அவர்கள் இயற்கை எய்தியமையையொட்டி அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம். (CS 18790) (4/6)

**குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**திருமதி பேரின்பராணி நாகராசா**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**பூ.கந்தையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(CR 37610) (3.6) **சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06.05.1938 மறைவு 06.03.2022

எமது பாடசாலை ஆசிரியர்
**திரு. செல்வரத்தினம் கோகுலானந்தன்**
அவர்களின் அன்புத் தந்தை

**திரு. K.M.செல்வரத்தினம்**
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், காரைநகர் இந்துக்கல்லூரி

அவர்களின் மறைவினால் துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (CS 18786) (3.6)

**ஆசிரியர் நட்புறவுக் கழகம் யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி



மன்ற உறுப்பினரும் , பிரதேச செயலக நிதி அலகின் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தருமான **திருமதி விஜயரதி துவாகரன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**கதிரேசு விக்கினேஸ்வரன்**

அவர்கள் 06.03.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CR 37605) (3.6) **தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் சாவகச்சேரி**

## மாவட்ட செயலகம் கிளிநொச்சி
## ஏல விற்பனை

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட பின்வரும் வாகனம் ஏலத்தில் விடப்படவுள்ளது.

| | |
|---|---|
| **ஏலம் இடம்பெறும் இடம்** | : மாவட்ட செயலகம் – கிளிநொச்சி |
| **ஏலம் இடம்பெறும் காலம்** | : 24.03.2022 வியாழக்கிழமை காலை 10.00 |
| **வாகன வகுப்பு** | : MOTOR LORRY |
| **வாகன இலக்கம்** | : NP LA - 2252 |
| **வாகன வகை** | : RENAULT |

ஏலவிற்பனையின்போது வெற்றிபெறுபவர் முழு பெறுமதியையும் பணமாகச் செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.15 மணிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தில் இருந்து அதனை எடுத்து செல்லல் வேண்டும்.

குறித்த மோட்டார் லொறி 21.03.2022 தொடக்கம் 23.03.2022 வரையான காலப்பகுதியில் அலுவலக நாளில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

**திருமதி றூ. கேதீஸ்வரன்**
**மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம் கிளிநொச்சி**


(CR 8014) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 12 - 1941

இறப்பு 06 - 03 - 2022



## பரநிருபசிங்கம் தனபாலசிங்கம்

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட பரநிருபசிங்கம் தனபாலசிங்கம் அவர்கள் கடந்த (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (ஆசிரியர்) நாகம்மா தம்பதிகளின் மருமகனும் கிருஷ்ணவேணி (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு கணவரும், வசீகரன் (ஜேர்மனி), வினோதினி (சுவிஸ்), வெண்ணிலா (ஜேர்மனி) ஆகியோரின், அன்புத் தந்தையும் பிரியதர்ஷினி (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்), ஜனகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, துரைசிங்கம், வன்னியசிங்கம் மற்றும், தற்பரானந்தம், பூலோகஇந்திரன், ஜெகசோதி, கங்காதேவி ஆகியோரின் சகோதரரும், தீபிஷா அஷ்வியா, இஷா, சாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2022) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வசீகரன் (மகன்)**
**0049 1573 2580 086**

(CS 43437) (3/6)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

உதயம் 20 . 08 . 1940

அஸ்தமனம் 09 . 03 . 2017



## திருமதி ஜானகி விஸ்வநாதசர்மா

(கலாவித்தகர் ஓய்வுநிலை இசை ஆசிரியை)

வேளமுகத்தானுக்கும், ஆறுமுகத்தானுக்கும்
தொண்டு செய்வதே லட்சியமாக கொண்டாய்
ஆனால் அது விதியின் விளையாட்டு
உங்களை அவன் பாதம் நோக்கி அழைத்துவிட்டார்
நீங்கள் ஆற்றிய சேவைகள் மறக்க முடியவில்லை
பக்திக்கு தொண்டனாக
பாசத்திற்கு தாயாக மாமியாராக
உற்ற மனைவியாக
யாவர்க்கும் ஏற்ற தொண்டஞ்சு வாழ்ந்தாய்
வேளை வந்து வேலவனின் அழைப்பு வந்து விட்டது
நாம் என்ன செய்வோம்
ஏற்று நீ அவனுக்கு தொண்டு செய்ய வேண்டி நிற்கும்.

**அன்பு அத்தான் விஸ்வநாதர்**
**அன்பு புத்திரன் ரமேஷ்**
**அன்பு மருமகள் சந்தியா**
**அன்பு பேரன் சதுர்த்திகன்**
**அன்புப் பேர்த்தி தீனசரண்யா**
**077 238 3080, 077 913 6596**

(CS 18767) (3/6)

### இன்றும்...

முறையில் மின் வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'A' முதல் - 'L' வரையான வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்குகாலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியில் இரண்டரை மணித்தியாலங்களுக்கும், மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் மின் வெட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.


'P' முதல் 'W 'வரையான வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்குகாலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரையான காலப் பகுதியினுள் 2 மணித்தியாலங்களுக்கும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணிவரையான காலபகுதிக்குள் ஒரு மணித்தியாலமும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(எ-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 - 09 - 1936

இறப்பு 07 - 03 - 2022



## பூதப்பிள்ளை கந்தையா

சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று முன்தினம் (07.03.2022) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை மயிலு தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகம்மா அவர்களின் அன்புக் கணவரும், பேரின்பராணி (ஆசிரியர் யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வடிவழகன் (முகாமையாளர் ஹட்டன் நஷனல் வங்கி - மன்னார்), குலதிலகம் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வவுனியா), உமாவதி( அதிபர்- யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க பாடசாலை), காலஞ்சென்ற கலைமதி, யசோதா, மணிதீபன் (விஷேட வைத்திய நிபுணர்- அவசர மருத்துவம் பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தெய்வயானை, நாகலிங்கம், சங்கரப்பிள்ளை, சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகராசா (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் தென்மராட்சிக் கல்வி வலயம்), துஷித்தா (விரிவுரையாளர் வவுனியா விவசாயக் கல்லூரி), மாங்களேஸ்வரன் (துணைவேந்தர் வவுனியா பல்கலைக்கழகம்), ரவீகரன் (ஆசிரியர் - யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி), சத்தியசாயிபாபா (ஆசிரியர் யா/ நாவற்குழி மத்திய மகா வித்தியாலயம்), விஜிதா (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஜிகா (வைத்தியர் யா/ போதனா வைத்தியசாலை), கோபிசங்கர் (மாணவன் பொறியியற்பீடம் மொரட்டுவ), பவித்திரா (மாணவி வவு/ இறம்பைக்குளம் திருக்குடும்பக் கன்னியர் மடம்), பதுஷன் (மாணவன் வவு/ தமிழ் மகா வித்தியாலயம்), உபேஷினி (மாணவி யா/ மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை), கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலை வீதி,**
**மட்டுவில்**
**சாவகச்சேரி**

(CS 418787) (3/6)

**தொடர்புகளுக்கு**
**0774118960**

**தகவல்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 04 - 1942

மறைவு 08 - 03 - 2022



## திருமதி யோகரத்தினம் கமலசிங்கம்

**(ஓய்வு பெற்ற ஆசிரியை - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டை உத்துங்க விநாயகர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகரத்தினம் கமலசிங்கம் அவர்கள் நேற்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. செல்லையா இராசமணி (அன்னக்கா) தம்பதிகளின் இளைய புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி கிருஸ்ணர் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கமலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கஜன் மற்றும் குமுதினி (பொறியியலாளர்-CESL யாழ்ப்பாணம்) கஜீரன், (உத்தியோகத்தர், இலங்கை வங்கி), குயிலினி (தாதிய போதனாசிரியர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜனார்த்தனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேச செயலகம்), DR.சுரேஸ் (மந்திகை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற DR.லட்சுமி மகாலிங்கம் அவர்களின் அன்புச்சகோதரியும், சுதந்திராதேவி தியாகராஜா அவர்களின் அன்பு மைத்துனியும், ரிஷிகேசன், ஹாசினி, மாதினி, ஹர்சானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.03.2022) புதன்கிழமை உயரப்புலம் ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை.**

(CS 43454) (4/6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை மீதான விவாதம் தற்போது நடைபெறுகின்றது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அமெரிக்காவின் பிரதிநிதி மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் அங்கு தெரிவித்துள்ளதாவது

சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. ஆனால் இந்த விடயத்தில் மேலும் முன்னேற்றகரமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேசப் பிரகடனங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்க இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகள் தற்போதும் தொடர்கின்றன.

கருத்துச் சுதந்திரத்துக்கு மதிப்பளிக்க வேண்டிய அதேவேளை, சிவில் சமூக மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகளை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் செயற்றிறன் மிக்கவையாகவும், வெளிப்படைத் தன்மை வாய்ந்தவையாகவும், சுயாதீனமானவையாகவும் இருக்க வேண்டும்.

அனைவரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வை அடைந்து கொள்வதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றார். (அ-எ-இ)

## கொய்யாப்பழம்...

கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மாங்குளம், புதியகொலனிப் பகுதியில் நடந்துள்ளது.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கற்கும் தயாபரன் தர்மினி (வயது-14) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். கிணற்றின் அருகில் இருந்த கொய்யா மரத்தில் பழம் பறிக்க முயன்றபோது கிணற்றுக்குள் சிறுமி, தவறி வீழ்ந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.சுதர்சன் சம்பவ இடத்துக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார். சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மாங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ-எ-19)

## போதையில்...

பொலிஸ் நிலையத்தில் நேற்று தஞ்சமடைந்துள்ளார். அந்தச் சிறுமியைப் பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தைப் பிரிவினிடம் ஒப்படைத்துள்ளனர்.

தரம் 7 இல் கற்கும் 12 வயதுச் சிறுமியே பொலிஸாரிடம் தஞ்சமடைந்துள்ளார். மதுபோதையில் வரும் தந்தை தினமும் தாயுடன் சண்டை பிடிக்கிறார் என்றும், தன்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகின்றார் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள சிறுமி, அதனால் தன்னால் வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார்.

சிறுமி வீட்டின் மூத்தபிள்ளை என்றும், இவரரை விட இன்னும் இரு பிள்ளைகள் உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக நடவடிக்கைக்காக சிறுமியை பொலிஸார் கோப்பாய் பிரதேச செயலக நன்னடத்தைப் பிரிவினிடம் ஒப்படைத்துள்ளனர். (அ-எ-23-20)

## பஸ் சாரதி ...

கள் பஸ் சாரதி மீது இனந்தெரியாதவர்கள் கத்திக் குத்து நடத்தியுள்ளனர். அதில் படுகாயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்.மைக்கல் தேவாலயத்துக்கு அருகில் நடந்துள்ளது. நீர்வேலிப் பிள்ளையார் கோயிலருகே பஸ்ஸை மறித்து ஏறிய இருவரில் ஒருவர் இறங்கிச் செல்லும்போது சாரதியின் மீது கத்திக்குத்து நடத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

பருத்தித்துறை, நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜஸ்ரின்ராஜ் (வயது-45) என்பவரே படுகாயமடைந்துள்ளார். அவர் நோயாளர் காவு வண்டிமூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-125-23)

## கோத்தாபய...

வித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சரவைப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெருநிலைப் பொருளாதாரக் கொள்கை, கொரோனாப் பெருந்தொற்று நிலைமையின் பின்னர் தேசிய பொருளாதாரத்தின் செயற்பாடு, பொருளாதாரத்தை மீள்கட்டமைத்தல், அரசின் பொருளாதாரக் கொள்கை மற்றும் நிதிக் கொள்கைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் போன்ற உள்ளூர் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பாக மிகவும் ஆழமாகக் கலந்துரையாடி ஒட்டுமொத்த பொருளாதார முகாமைத்துவத்தை மேற்கொள்வதன் மூலம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் நோக்கில் 'பொருளாதாரப் பேரவை' வாராந்தம் கூடுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். பேரவையின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய ஏற்புடைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இயைபுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும், தேவைக்கேற்ப பொருளாதாரப் பேரவைக் கூட்டத்துக்கு போதுமான துறைசார் அறிவுகொண்ட கல்வியியலாளர்களை அழைக்கவும், ஜனாதிபதியால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் படிமுறைகள் தொடர்பாக அமைச்சரவையின் உடன்பாட்டை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தக் குழுவில், பிரதமர், வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், திறைசேரி செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தம்மிக்க நாணயக்கார ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (அ-எ-44)

## கோத்தாபயவின்...

பாரியார் அயோமா கோத்தாபயவின் தாய் பத்மா பீரிஸ் தனது 89 ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.

இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறவுள்ள நிலையில் திருமதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்கா செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## இயந்திரத்தில்...

கொழும்புத்துறையில் நேற்று மதியம் நடந்துள்ளது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த சுரேஸ்வரன் சுதர்சன் (வயது-29) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மின்சார வயரில் ஏற்பட்ட மின் ஒழுக்கால், கல் அரியும் இயந்திரத்துக்கு மின்சாரம் பாய்ந்துள்ளது என்றும், அந்தச் சந்தர்ப்பத்தில் இயந்திரத்தை இயக்கிய இளைஞர் மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகினார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தமிழக...

கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 11 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து தமிழக மீனவர்கள் 11 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 3 படகுகளும் கைப்பற்றப்பட்டன. மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தமிழக மீனவர்கள் 11 பேருக்கும் எதிரான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் ஜெ.கஜநிதிபாலன், மீனவர்களுக்கு 18 மாத காலச் சிறைத்தண்டனை விதித்து 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தார்.

அதேவேளை, தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் தொடர்பான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது. (அ-எ-23)

## 14,988...

செய்யும் நோக்கில் 25 விசாரணைக் குழுக்களை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திபபு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தால் மாத்தறை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அந்தப் பிராந்திய அலுவலகங்களுக்கு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய முறையான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அறிக்கைகளை வழங்கல் உள்ளிட்ட அதிக பணிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்து முடிவுறுத்துவதற்காக 25 விசாரணைக் குழுக்களை நியமித்து துரித வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதி அமைச்சர் அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளார் - என்றார். (அ-எ-44)

## திருத்தம்...

திருத்துவதற்கான புதிய சட்ட வரைவு பெப்ரவரி 10 ஆம் திகதி அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இந்தச் சட்டவரைவை சவாலுக்குட்படுத்தி பல தரப்பினரும் உயர்நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இது தொடர்பான தனது தீர்ப்பை உயர்நீதிமன்றம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அப்போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபைக்கு அறிவித்தார் சபாநாயகர்.

உயர்நீதிமன்றத்தின் பொருட்கோடலுக்கு அமைய, குறித்த சட்டவரைவின் மூன்றாவது சரத்தானது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அதைச் சட்டத்துக்குள் உள்வாங்க முடியும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின், அந்தச் சரத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.

சட்டவரைவின் நான்காவது சரத்தானது அமைச்சரால் குழுநிலை விவாதத்தின் போது திருத்தம் செய்யமுடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, உயர்நீதிமன்றத் தீர்ப்பை யேற்று, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாமல் சாதாரண பெரும்பான்மையுடன் சட்டமூலத்தை நிறைவேற்றவே அரசு எதிர்பார்க்கின்றது. (அ-எ-44)

## வயோதிபத்...

யும், 7 லட்சம் ரூபாவையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த மூவர் வீட்டிலிருந்த வயோதிபர் மீது தாக்குதல் நடத்தியதுடன், அவரது மனைவியின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீடு மற்றும் வீட்டுடன் இணைந்த வணிக நிலையம் என்பவற்றைச் சல்லடையிட்டுத் தேடிய கொள்ளையர்கள் 32 பவுண் நகைகள் மற்றும் வணிக நிலையத்தில் இருந்த 7 லட்சம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றது என்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான 60 வயதான வயோதிபர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ-எ-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீட்டெடுக்க அரசினால் முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 9**

**அனைத்துவகையிலும் வீழ்ச்சி அடைந்துள்ள இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பமுடியும். ஆனால், அதற்காக தியாகங்களைச் செய்வோர் இந்த அரசில் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கண்டிக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிலைபேறான பொருத்தமான உண்மையான செயற்றிட்டம் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக உலக நாடுகளுடன் உகந்தமுறையில் கொடுக்கல்- வாங்கல்களில் ஈடுபடவேண்டும். வரலாற்றில் எத்தருணத்திலும் எதிர்க்கட்சிக்கு இராஜதந்திரரீதியாக நாடுகள் நிதியுதவிகளை வழங்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அதை மாற்றி அமைத்தது.

எதிர்கால இலங்கையைக் கட்டி யெழுப்புவதற்கான உகந்த செயற்றிட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் உள்ளது.

ஊழல், மோசடி மற்றும் லஞ்சம் நிறைந்த தற்கால அரசால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாதென்பது நிதர்சனமான உண்மை. நாட்டுமக்களை ஏமாற்றுவதை இந்த அரசு தொடர்ச்சியாக செய்து வருகின்றது. கேவலமான இந்த அரசை விரட்டியடிப்பதற்காக கொழும்பில் ஒன்று கூடுவோம் - என்றார். (ம-4-இ)

டீசல் பற்றாக்குறை

# கொள்கலன் பாரவூர்திகள் இயக்கமின்றி முடக்கம்

கொழும்பு, மார்ச் 9

நாட்டில் டீசல் பற்றாக்குறையால் சுமார் 4 ஆயிரம் கொள்கலன் பாரவூர்திகளை இயக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை கொள்கலன் வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதனால் உணவு, மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் போக்குவரத்து முற்றாக முடங்கிப்போயுள்ளது. சுமார் 6 ஆயிரம் கொள்கலன் பாரவூர்திகள் இருந்தாலும் அதில் சுமார் 2 ஆயிரம் கொள்கலன் பாரவூர்திகள் மட்டுமே இயக்கப்படுகின்றன.

இதனால் வெளிமாகாணங்களுக்கு பொருள்களைக் கொண்டு செல்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மூலப்பொருள்கள் விலையேற்றம் கட்டட நிர்மாணங்கள் நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 9

சகல கட்டட மூலப்பொருள்களினதும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், கிராமியத்தெருக்கள் உள்ளடங்கலாக சகல அரச நிர்மாணக் கருத்திட்டங்களையும் இலங்கை தேசிய நிர்மணத்துறைச் சங்கம் நிறுத்தியுள்ளது.

பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் மேலதிக நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாத வரை இந்த நிலைமை தொடரும் என்று சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாரச்சி தெரிவித்துள்ளார்.

விலையேற்றங்களைக் கருத்தில் கொண்டு நிர்மாணச் செலவு மதிப்பீடு 52 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டும். அதிகாரிகள் பொருள்களுக்குக் கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப்படுத்தத் தவறும்பட்சத்தில் சகல நிர்மாணப் பணிகளையும் தொடர்ந்தும் முடக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-ரி1)

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் மகளிர் தின கொண்டாட்டம்

யாழ்.,மார்ச் 9

யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத்தின் மகளிர் தினக் கொண்டாட்டம் சங்கத்தில் நேற்று இடம் பெற்றது.

கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து, விழிப்புலனற்ற மகளிருக்கு, யாழ்.மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பவால்காசோலை வழங்கப்பட்டது.

நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன், நவீல்ட் பாடசாலையின் அதிபர், ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-4,125,20)

**வாகனம் விற்பனைக்கு**

**Toyota Aqua** 2012 பாவனையிலுள்ள **hybrid** கார் விற்பனைக்கு உண்டு.
இரண்டாவது உரிமையாளர் **Reg 2014**
**Service Records are available**
விலை பேசித்தீர்மானிக்கப்படும். (CS 18779) 3/6)
**தொடர்பு : 076 226 9153**

**தென்னங்காணி விற்பனைக்குண்டு**

எழுதுமட்டுவாள் A9 வீதியிலிருந்து 1 1/2km தூரத்தில் 15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. 5 ஏக்கர்களாக பிரித்தும் கொடுக்கப்படும். (CS 18784) 3/6)
**077 653 1980, 074 037 1960**

**பெண் வேலையாள்கள் தேவை**

ஆரியகுளத்தில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு அடிப்படை ஆங்கில அறிவுடைய அடிப்படை கணினி அறிவுடைய பெண் வேலையாள்கள் தேவை. (திருமணமான பெண் வேலையாள்கள் விரும்பத்தக்கது)
வயது எல்லை 22 - 35 வரை
இன்றிலிருந்து 11.03.2022 (வெள்ளிக்கிழமை) மட்டும் தொடர்பு கொள்ளவும்.
**077 353 3809, 077 373 5338**
**Email : keethan3533809@gmail.com**
(IN 18781)(3/6)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு) A9 வீதியில் இருந்து 150M தூரம், லங்காஅசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில், நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்,யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
**18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல், நன்னீர்ச்சூழல்**
தொடர்பு : குரு - **077 6234 204, 077 2880 152, 076 6583 621, 077 9116 983**

ECBC SRI LANKA
**கணினி பற்றிய அறிவிருந்தும் தரமான கணினி சான்றிதழ் இல்லையா?**
**இலவச தகுதி காண் பரீட்சையில் பங்கு பெறுங்கள்.**
பரீட்சையின் பின் NVQ level ற்கு சமமான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
தேவையேற்படின் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு நடைபெறும். பாடசாலை, தொழில்நுட்ப கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள். வேலை தேடுவோர். வெளிநாடு செல்ல உள்ளோர் அரச,தனியார் ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.
வட கிழக்கு அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நடைபெறும்.
**பெயர் விபரங்களை SMS செய்யுங்கள்** (CS 00973) (4/6)
ECBC
இல. 56, புகையிரத நிலைய வீதி, வவுனியா. 0777-585969

யாழ் **கலாலயா** பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**A/L** பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!
**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழுகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவியருக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**16.03.2022 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**20.03.2022 ஞாயிறு காலை 10.00மணி**
மேலதிக விபரங்களை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்
-இயக்குநர்-
Guru



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.